# திராவிடநாடு

## முரசு முழக்கு!!

[என். பி. நடராசன்]

★

வடநாட்டுக் குள்ளநரிக் கூட்டம்–இனி
வாலாட்ட நாம் விடமாட்டோம்!
முடைநாற்ற இந்திப்பெண் கரத்தை–நாம்
தொடமாட்டோம்; தொட்டறுப்போம் சிரத்தை!

*

கொட்டிக் கொடுப்பது பல்கோடி–வடக்
கிட்ட பிச்சையோ சிலகோடி–அட
வட்டிக்கடை நாடு வடக்கு–அதை
தட்டிக் கேட்டவர் நாக்கடக்கு!

*

தமிழ் தெலுங்கும் கன்னடமும், பொழில்கள்
கமழ் கேரளம் துளுவாம் மொழிகள்–இனி
அமைத்தாளும் தனி அரசு–என்றே
அடித்து முழக்கு முரசின்றே!!

# "பாவி, பொல்லாதவன்......"



**தம்பி,**

அந்தக் காரியாலயத்துக்குத் தலைமை அதிகாரியாகவேலைபார்க்க வந்த இளைஞர், மேனாடுசென்று, பல அலுவலகங்களின் வேலை முறைகளைக் கண்டறிந்து வந்தவர்.

இதுவரையில்தான் இராமாச்சாரி தலைமை அதிகாரியாக இருப்பவர்களை ஏய்த்து வந்தார், இனி அவர் 'ஜம்பம்' பலிக்காது; புதியவர் நெருப்பு என்கிறார்கள்; சோம்பேறித்தனமாக இருப்பவர்கள், சூதாக நடந்துகொள்கின்றவர்கள், தவறான வழி செல்பவர்கள் ஆகியோரைக் கண்டுபிடித்துவிடுவார், என்று அலுவலகத்து ஊழியர்கள் பேசிக்கொண்டனர்.

நீண்ட காலமாகத் தன்னிச்சையாக நடந்துகொண்டு வந்த இராமாச்சாரிக்கு இனி பிடித்தது தலைவலி என்றனர்.

இரண்டு மாதங்கள் சென்றன! அலுவலகத்திலே புதிய கண்காணிப்பு, புதிய கண்டிப்பு.

எந்த வேளையிலோ தலைமை அதிகாரி குறை கண்டுபிடித்து விடுகிறாரோ, அதனாலே என்ன தண்டனை கிடைக்குமோ, என்று பயந்து பயந்து பணியாற்றினைந்தனர்.

எல்லோருக்கும் இராமாச்சாரிக்குத்தான் முதல் தாக்குதல் கிடைக்கும்; அவருடைய 'சீட்டு'தான் கிழிக்கப்பட்டுவிடும், என்று பேசிக்கொண்டனர்.

இரண்டு மாதம் சென்றதும், இராமாச்சாரிக்கு, வேலை உயர்ந்தது!

மற்ற யாரையும்விட திறமையில் குறைவானவர், தில்லுமுல்லு செய்பவர், இராமாச்சாரி. அப்படிப்பட்டவருக்கு 'மேலிடம்' தரப்பட்டது கண்டு பலரும் திகைத்தனர்.

புதிய மேலதிகாரி, எதையும் நுண்ணறிவுடன் கண்டுபிடிக்கக் கூடியவர் என்றல்லவா எண்ணிக்கொண்டோம், இராமாச்சாரி சூதுக்காரன் என்பதை எங்கே கண்டறிந்தார்? தெரிந்திருப்பாரானால், அவனுக்கா மேலிடம் தருவார்? என்று பேசிக்கொண்டனர்.

இராமாச்சாரிக்கு மேலிடம் கொடுத்தது மட்டுமல்ல, மேலதிகாரி மேகநாதன் அவரை வெகுவாகப் பாராட்டி, குறிப்பும் எழுதி வைத்தார்.

"பயல்கள் இஞ்சி தின்ற மந்தி போலாகிவிட்டார்கள். புதிய மேலதிகாரி வந்ததும் என் தலை மீதுதான் கைவைப்பான் என்று பேசிக்கொண்டனர். இப்போது, அவனே எனக்கு மேலிடம் கொடுத்ததுடன், என் திறமையைப் புகழ்ந்து குறிப்பும் எழுதி இருக்கிறான், காரணம் என்னவென்று கண்டுபிடிக்க எல்லோரும் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டு கிடக்கின்றனர்!" என்று கேலி செய்தார் இராமாச்சாரி, தன் 'பார்யாளிடம்' பேசும்போது.

"நீர்தான், யாரையும் சொக்குப்பொடி போட்டுவிடுவீரே! உம்மோட சமர்த்து நேக்கல்லவா தெரியும்" என்றாள் சகதர்மிணி.

"உன்னாலேகூட அப்பாவோட சாமர்த்யத்தைக் கண்டுபிடிக்க முடியாதடி அம்மா" என்றான் வாசு — இராமாச்சாரியாரின் ஏக புத்ரன்.

"அப்படிச் சொல்லுடா, சிங்கக்குட்டின்னேன். இவ என்ன, இவளைப் படைச்ச பிரம்மதேவன் வந்தாலும், என்னோடே முறைகளைக் கண்டுபிடிக்க முடியாதுன்னேன்" என்று பெருமை பேசினார் இராமாச்சாரி.

"உம்ம பிரதாபத்தை நீரே பேசிண்டிரும், நேக்கு நேரமில்லை, அதை எல்லாம் கேட்டுண்டிருக்க, நேந்திரங்கா வந்திருக்கு, 'பொடிமாஸ்' பண்ணணும்" என்று கூறிவிட்டு, அம்மையார் அடுக்களை சென்றபிறகு, மகன் கேட்டான் தந்தையை "எப்படியப்பா, மடக்கினீர்? என்னமோ இலண்டன் போய் வேலை கற்றுண்டு வந்தானுமே, வெள்ளைக்காரனிடம்" என்று.

"வெள்ளைக்காரனிடம் வேலை கத்துண்டு வந்துவிட்டா, போதுமாடா! எல்லாம் ஏட்டுப்படிப்பு தானே! ஒரு விநாடியிலே நான் அவனை எடைபோட்டுவிட்டேன். நிறைய் படிச்சிருக்கான், ஆகையாலே ஜீரணமாகி இராது என்பது புரிந்தது. சரி, இவனைச் சுலபமாக மயக்கலாம்னு, தைரியமும் வந்தது. ஒரு நாள், ரயிலுக்கு ஒரு பத்து பார்சல் அனுப்புவதற்கு, பார்சல் கிளார்க், மோசஸ், வேலை செய்துண்டு இருந்தான். அவன் ஒரு முசுடு. உலகத்தையே பறிகொடுத்தவனாட்டம் எப்பவும் 'உம்'முனு இருப்பன். ஒரு காரியம் அவனாலே ஆகவேண்டி இருந்தது. அங்கே போயிருந்தேன்—கிடங்கு அறைக்கு.

மோசஸ் வழக்கப்படி, கூலியாட்களை வாய்க்கு வந்தபடி வைதுண்டு இருந்தான்; அதனாலே அவாளும் வேலையை ஒண்ணும்பாதியுமா செய்துண்டிருந்தா. ஆனா ஒரு பய மட்டும், ரொம்ப சுறுசுறுப்பா வேலை செய்துண்டிருந்தான். நான் அவனையே கவனிச்சிண்டிருந்தேன் என்பது அவனுக்குத் தெரியாது.

(13-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 1-1-56 [இதழ் 26

# கன்னெஞ்சர் ஆட்சி!

"குற்றம் என்ன செய்தார்?"

"குற்றம் என்ன செய்தாரா? கலாச்சார நிலையம் என்கிற பெயரால் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்!"

"விபரமாகச் சொல்!"

"கனம் நீதிபதியவர்களே, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் இவர், குழந்தைகளைக் கூட்டி வைத்து கல்விபோதனை செய்துவருகிறார்!"

"ஏனய்யா, அப்படியா செய்தீர்?"

*

நீதிபதியே கேட்கிறார், ஏனய்யா அப்படியா செய்தீர் என்று! என்ன சொல்லமுடியும், கூண்டிலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருப்பவரால்.

அக்கிரமக்காரர்கள், சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதும் சட்ட விரோதம் என்று செய்திருக்கிறார்கள் — சட்டம் அநீதியானது என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது. உலகத்தில் யார்தான் ஏழை எளியவர்களுக்கு அறிவொளி பூக்கச் செய்யும் அறப்பணியினைக் குறை சொல்லமுடியும்? திருப்பணி அது! எனவே, பூரிப்புடனும், ஆனந்தத்தோடும் செய்கிறார்கள், அவர்கள். அது குற்றமாம்! அரசாங்கம் இழுத்துவந்து கூண்டிலே நிறுத்தியிருக்கிறது! அக்கிரமக்காரர்களின் போக்கைக் கண்டிப்பார் – நீதி வழங்கப்படும் – நேர்மை நிலைநாட்டப்படும் — என்கிற நம்பிக்கையுடன் நிற்கிறார் அவர். ஆனால், நீதிபதியும், "ஏனய்யா அப்படியா செய்தீர்?" என்று கேட்கிறார்—அத்தகைய குற்றம் செய்த உன்னைத் தண்டிக்கிறேன் எனக் கூறுகிறார்—அதிகாரிகள் அவரை இழுத்துக்கொண்டுபோய்ப் பூட்டுகிறார்கள் சிறைக்குள்—இந்தக் காரியம் தினசரி நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

எங்கே இந்த அக்கிரமம் நடைபெறுகிறது — கல்வி போதிப்பது சட்டவிரோதமா! கன்னெஞ்சர் ஆட்சியாயிருக்கிறதே! — என்று ஆச்சரியப்படுவீர். ஆமாம் தோழர்காள், ஆமாம்—நிறவெறி தாண்டவமாடும் தென்னுப்பிரிக்காவிலே சில நாட்களாக இந்தக் கோர நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஆப்பிரிக்க நாட்டினரை ஆளும் வெள்ளையர்கள், அடாபிடிச் சட்டம் ஒன்றைச் செய்தனர். அதன்படி, கருப்புநிற மக்கள் கல்விக் கூடங்கள் நடத்தவேண்டுமென்றால் அரசாங்கத்தின் அனுமதியை அவசியம் பெறவேண்டும்! அனுமதி பெற்றபின்னரே. அவர்கள் கல்விச் சாலைகளை நடத்தமுடியும். ஆதிக்கக்காரர்கள் இப்படியொரு சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள், கல்வி நீரோடையின் அருகே நெருங்க தடை விதித்திருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? கல்வியின் மணம், கருப்பு நிற மக்களுக்குக் கிட்டக் கூடாது! அறிவொளி ஏற்படுவதால்தான், ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் துணிவு மலர்கிறது— கேள்விகள் கேட்கிறார்கள்—நியாயம், அநியாயம் பேச ஆரம்பிக்கிறார்கள்—நிறவெறி காட்டாதே, நீயும் மனிதன் நானும் மனிதன், என்று கர்ச்சிக்கிறார்கள்—உயர்வு, தாழ்வு தகுமா! ஆகுமா! என்று கண்டிக்க ஆரம்பிக்கிறார்கள்—ஆகவே, இந்த அறிவொளி பூக்கும் வழியையே அடைத்துவிட்டால் என்றும் நமது அடிமையாக இருப்பார்கள், எது செய்தாலும் கேட்கமாட்டார்கள், வெள்ளையர்களே உயர்ந்தவர்கள் வேறு இனத்தவர் எல்லாம் எங்கள் எடுபிடிகள் என்று தர்பார் நடத்தலாம் என்கிற சூதுமதியின் காரணமாக இப்படியொரு சட்டம் கொண்டுவந்தனர். அதனால், யாராவது, கருப்பு நிற மக்கள், கல்விச் சாலைகளை ஆரம்பிக்கப் போவதாக சர்க்காரின் அனுமதியை நாடினாலும் கிட்டுவதில்லை. எவ்வளவு தூரம் வேண்டிக் கேட்டாலும் கொடுப்பது இல்லை. இந்தவேதனை கலந்த விபரீதத்தைக் கண்டு அவர்கள் திகைத்தார்கள். யோசித்தார்கள்—சரி, வந்தது வரட்டும் என்று நினைத்து—கருப்புநிற இனமக்களின் அறிவுக் கண்கள் மூடப்படும் அக்கிரமத்தை எப்படியாவது போக்கவேண்டும் என்று துணிந்து — ஆங்காங்கும் இரகசியப் பள்ளிகள் அமைக்கலாயினர்— அதற்குப் பெயர் கலாச்சார நிலையம் என்றும் சூட்டினர்.

நுழைந்து பார்த்தால், அழகான கட்டிடமோ, மேசை நாற்காலிகளோ இருக்காது — குழந்தைகள் இரு வரிசைகளாக உட்காரவைக்கப் பட்டிருப்பார்கள்— அவர்களுக்கிடையே ஒருவர் உலவிக்கொண்டிருப்பார், ஒரு புத்தகத்தை உரத்த குரலில் படித்தபடி. குழந்தைகள் அவர் கூறுவதையும் தரையில் எழுதிக் காட்டுவதையும் கொண்டு கல்விகற்று வருகிறார்கள்.

இது சட்ட விரோதம் என்று சொல்லி, அத்தகைய 'கலாச்சார நிலையங்களின்' நிர்வாகிகளை அழைத்து வந்து, தண்டிக்கிறார்களாம்! அப்படித் தண்டிக்கப்படுவோர் யார் தெரியுமா? அதுதான் விந்தை! தென்னுப்பிரிக்காவினை ஆளும் வெள்ளையர், எந்த இயேசு நாதரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றனரோ, அதே இயேசு நாதரின் சீடர்கள்தான் குற்றவாளிக்கூண்டிலே நிறுத்தப்படுகிறார்களாம்.

கருப்புநிற மக்களுக்கு, அரசினரால் இழைக்கப்படும் இந்தக் கொடுமையை எதிர்த்து, பாதிரிமார்கள்தாம் இப்படி இரகசியமாகக் கல்வி கற்றுத் தருகிறார்கள். இயேசுநாதர், எல்லோரையும் நேசி என்று சொன்ன பொன்மொழி அவர்களுக்குப் பெரிதாக இருக்கிறது—ஆனால், அதே இயேசுவை இதயத்தில் ஏந்திக்கொண்டிருப்பதாகக் கூறும் வெள்ளைத் திமிர்வாதிகளுக்கோ, அந்தச் செயல் அடாததாகத் தென்படுகிறது. அதனால், கூண்டிலே நிறுத்தி, குற்றவாளிகளாக்கிச் சிறைக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். நல்லதோர் காரியத்துக்காக நமது இயேசுபிரான் சிலுவையிலேயே அறைபட்டபொழுது நாம் சிறைச்சாலைக்குச் சென்றால் என்ன என்கிற எண்ணத்துடன் அவர்கள் புன்சிரிப்போடு போய்க்கொண்டும் இருக்கிறார்கள்!

சூத்திரன் காதில் சாஸ்திரம் விழுந்துவிட்டால், அந்தச் செவியில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று— என்றான் மனு இங்கே! அப்போதுதான், அவர்கள், தாசனுதாசர்களாகக் கிடப்பார்கள் என்கிற சூதுமதிகொண்டு.

சற்றேறக் குறைய, தென்னுப்பிரிக்காவை ஆள்வோரும், கருப்பு

நிற மக்கள்பால் இப்படிப்பட்ட சட்டங்களையே திணித்து அக்கிரமம் புரிந்துவருகிறார்கள்.

இந்த அநீதியைக் கண்டு அறிவுலகம் தலைகுனிகிறது. அடாது, என்று கண்டித்தும் வருகிறது—ஐக்கியநாடுகள் சபையிலும் பிரச்னை இருந்து வருகிறது — அதனை எதிர்த்து பாதிரிமார்களே கிளர்ச்சி செய்கிறார்கள்—ஆயினும் என்ன, இயேசுவின் நாமத்தை உதடுகளில் உச்சரித்தபடியே அக்கிரமம் செய்து வருகின்றனர், வெள்ளையர்கள், தென்னாப்பிரிக்காவில்!!

★

# ★ அவர்கள் வேலை! ★

குறவன் வேடம் புனைந்து கூத்தாடியும், புலிவேடம் போட்டு ஆடியும், உண்டியல்கள் எடுத்தும், வீடு வீடாகச் சென்று கேட்டும் நம்மருந்தோழர்கள், புயலுக்குப் பலியானோரின் கண்ணீர் துடைக்க, தம்மாலான வகைகளிலெல்லாம் ஊர்தோறும் நிதி திரட்டுகிறார்கள்! சோளம், கம்பு, நெல், அரிசி, கந்தல் — இதுபோலக் கையில் கிடைத்ததை யெல்லாம் நாட்டின் நாலு பக்கங்களிலுமுள்ள ஏழை எளியவர்களும் தரத் தயங்கவில்லை. புயல்விளைவித்த சேதத்தைக்கண்ணால் கண்டுவந்த பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், தான் கண்ட காட்சியை நெஞ்சுருக எடுத்துரைக்கிறார். காமராஜர், பறந்து பறந்து வேலை செய்கிறார்! அரசியலிலீடுபட்டிருக்கும் சகல கட்சிகளும், தம்மாலியன்றளவுக்கு உதவ முயலுகின்றன.

ஒடிந்துபோன குடும்பங்கள் ஏராளம்! மடமடவெனச் சாய்ந்த மரங்களைப்போல. வேரறுந்துபோன குடும்பச் சோலைகள் பலப்பல! அவர்களடைந்திருக்கும் ஆற்றொணாத் துயரத்தை, அவ்வளவு எளிதில் போக்கிவிட இயலாது—பிணக்காடு, என்பர் வர்ணனைக்கு. ஆனால், அங்கே உண்மையிலேயே ஊர்கள் எல்லாம் பிணக்காடுகள் ஆயினவாம். அதனால் எழுந்த நாற்றம், இன்னும் அடங்கவில்லையாம் — நோய் நொடிகள் வரக் கூடுமோ என்பதால் எச்சரிக்கையாக ஊசிபோடுகிறார்கள் ஒவ்வொரு இடங்களில் சர்க்கார். இப்படி, அரசும், அரசியல் இயக்கங்களும், ஆங்காங்கிருக்கும் மக்களும் அவதியடைந்தோருக்கு உதவி ஓடிஓடிப் பணியாற்றுகிறார்கள்.

'கலைஞர்கள் என்றாலே கசக்கிறது எனக்கு' எனச் சொல்லும் பெரியவர்கள் கூட, திரையுலகத் தோழர்களின் சீரிய உதவிகளைக் கண்டு வாழ்த்துமளவுக்கு வந்திருக்கிறார்கள்—மக்கள் படும் அவதி, அந்தளவுக்கு உள்ளது! அவர்களின் சோகத்தைக் கொஞ்சமாவது துடைக்கவேண்டும் — இதைவிட மனிதாபிமான மிக்க செயல் வேறெதுவுமில்லை-என்கிற எண்ணத்துடன் ஒவ்வொருவரும் பாடுபடுகிறார்கள்-இந்நிலையில், புயலுக்கு ஆளான தஞ்சை மாவட்டத்தின் மற்றொரு பகுதியான குடந்தையில் கடந்த 22-ந் தேதி 'சப்ஆர்டினட் ஜட்ஜ்' தலைமையில் கூடினாராம். எதற்கு? புயலுக்கும் வெள்ளத்துக்கும் ஆளான மக்களுக்கு ஏதாவது செய்வோம் என்று ஆலோசிக்க இருக்கலாம் என்று எண்ணுவீர்கள்! ஏனெனில், கூடியோர் அனைவரும் நகரப் பெருமக்கள்! பதினொரு நாளைக்கு பதினொரு 'பிராமணாளை'க் கொண்டு மகன்யாச ஜபம் செய்வதென்று முடிவு செய்வதற்காகக் கூடினார்களாம். ஜபம் செய்யப்படுகிற இடம் — குடந்தை ஆதிகும்பேஸ்வரசாமி கோயில். ஆண்டவனை வேண்டி, "அம்மையப்பா! அவதிப்பட்ட மக்களைக் கண் திறந்துபார், நாசமடைந்து கிடக்கும் கழனிகள் பக்கம், கண்களைத் திருப்பு. துயரம் தீர, அருள் செய்" என்று துதிப்பதற்காக 'ஜபம்' நடத்துவார்கள்—வேறு எதற்காக இருக்கும்? என்று கேட்கக்கூடும் நீங்கள்!

அன்பர்காள்! நகரப் பெருமக்கள், கூடியது அதற்காக அல்ல—ஆயிரத்துக்கு மேல் செத்தனரே, அது பற்றி கவலைப்பட அல்ல — பூவும், பிஞ்சும், முதியவர்களும், வாலிபர்களும், கணவனும் மனைவியுமாக மடிந்தனரே அந்தக் கோரம் கண்டு துக்கிக்க அல்ல—அனாதைகளாகவும், ஆதரவற்றவர்களாகவும் பிறர் கையை எதிர்பார்த்த வண்ணம் திரிகிறார்களே அவர்தம் கண்ணீரைத் துடைக்கவும் அல்ல, அவர்களது கவலை, வேறு! காஞ்சி காமகோடி பீடம் 'ஜகத்குரு' சங்கராச்சாரியார், சின்னாளாக நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறாராம் — அவர், அந்த நோயினின்று மீளவேண்டும் என்பதற்காகவே, 'சப் ஆர்டினட் ஜட்ஜி' தலைமையில் பெருமக்கள் கூடி 11 நாளைக்கு 11 பிராமணர்களைக் கொண்டு 'ஜபம்' செய்வதென்று முடிவு செய்தார்களாம்!

'ஜகத்குரு' சகல பாவவினைகளையும் தீர்த்துவைப்பார், ஜென்மம் சாபல்யம் அடைய அருள் புரிவார், ஆண்டவனின் அம்சம் பெற்றவர், என்று ஆயிரக்கணக்கானோர் செல்லுகிறார்கள், சங்கராச்சாரியாரிடம்—காணிக்கையும் செலுத்துகிறார்கள்.

அந்த 'ஜகத்குரு'வின் நோய் தீர வேண்டுமென்று, கடவுளிடம் கேட்க, பக்தர்கள் கூடுகிறார்கள். அந்த ஆண்டவனை, 'ஜகத்குரு' வணங்கிக் கும்பிட்டால் அவர் காதில் ஏறாதா, அல்லது இவர்கள் 'சிபார்சு' செய்தால்தான் ஈசன் மனம் உருகுமா? இல்லை, எம்பெருமானுக்கும் சங்கராச்சாரிக்கும் ஏதாவது தகராறு?

'ஜகத்குரு' என்ன சாதாரணமாக எல்லா மனிதர்களையும் போன்றவரா? —இல்லை, என்று இந்தப் பக்தர்களே கூறுவார்கள்! அவருக்கேன், அஞ்சலைக்கும், ஆறுமுக முதலியாருக்கும் வருவதுபோல நோய்நொடிகள் வரவேண்டும்? — என்று அறிவியக்கவாதிகள் கேட்டால், சீறுவர் இந்தச் சீமான்கள்! எனினும், ஜபம்செய்து அவரைக் காப்பாற்றப்போகிறார்களாம்.

"சரி, செய்யட்டும்—ஏதோ அவர்களது சக்தியானுசாரம் தமது குருநாதருக்குச் செலுத்தும் காணிக்கை, அதுதான்போலும் — ஆசையால், செய்கிறார்கள் — அப்படியாவது சங்கராச்சாரியாரின் 'வியாதி விலகட்டும்'' என்று நினைத்தால், அதற்குள் இன்னமோர் செய்தி வருகிறது.

ஜபம் செய்வதால் நோய் போய்விடும்—என்று அவர்கள் கூட திடமாக நம்பவில்லை.

ஆமாம்! அவர்களில் ஒருவரான ஆர். மகாலிங்க அய்யர் என்பவர், சங்கராச்சாரியாரைப் போய்ப்பார்த்து வந்திருக்கிறார். அவர், ஒரு டாக்டர். ஜகத்குருவை, நன்றாகப் பரிசோதித்து, படுக்கையைவிட்டு நலம்பெற எப்படியெப்படி வைத்திய முறைகளை அனுசரிக்கவேண்டும் என்கிற ஆலோசனைகளையெல்லாம் சொல்லி வந்தாராம் — இந்த விஷயமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும், பிராமணாள், ஜபம் செய்யும் ஏற்பாடுகளுக்கு ஆதரவு தரவும், ஆண்டவனைத் துதிக்கவும் முடிவு செய்திருக்கிறார்கள். தஞ்சை, கதறுகிறது! இவர்களோ ஜபம் செய்கிறார்கள்!! விந்தையான பக்தர் குழாம்.

★

### வருந்துகிறோம்

காஞ்சீபுரம், நமது இயக்கத் தோழர் வே. இராசு அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் சரோஜா, 20-12-55ல் இயற்கை எய்திய செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

# அறுவடை

தொடர் சித்திரம்

3

**மாடிப்படிகளின்** ஓரமாக, சிராக் விழுந்துகிடந்தான்! அவன் விழுந்ததால் ஏற்பட்ட சப்தம் கேட்டுத் திரும்பிய விடால், அங்கெலைப் பார்த்தான்.

அங்கெல் சிறிது நேரமும் தாமதிக்க வில்லை! பெண்ணுள்ளமாயிற்றே! ஓடினுள் — மயக்கமுற்றுக்கிடந்த சிராக் பிரபுவின் அருகில் போய்ப் பார்த்தாள். ''அன்பே! இங்கே கொஞ்சம் வாருங்கள். அப்படி அறைக்குள் தூக்கிவரலாம்'' என்ருள். விடால், எதுவும் சொல்லவில்லை.

இருவருமாக, அவன் தோள்பட்டையைப் பிடித்துத் தூக்கலாயினர். தூக்க முயன்றதும்,அவன் 'ஆ!'என்றுஈனஸ்வரத்தில் முனகினுன், துடித்தான். விடால், அவன் அக்குளைப் பார்த்தான். ஒரே இரத்தமயமாயிருந்தது. வடிந்துபோன இரத்தம் உறைந்து போயிருப்பது போலத் தெரியலாயிற்று. இருட்டானதால் இதுவரையில் அவர்தம் கண்களுக்குத் தென்படவில்லைபோலும்! இரத்தத்தை மங்கிய வெளிச்சத்தில் பார்த்த அங்கெல், ''ஐயோ! இரத்தம்'' என்று கூச்சலிட்டாள். விடாலும் அங்கெலுமாகச் சேர்ந்து அவனை அறைக்குள் தூக்கிக்கொண்டு வந்தனர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மயக்கம்தெளிந்து அவன் கண் விழித்ததும், ''எப்படி உனக்கு இந்தக் காயம் ஏற்பட்டது?'' என்று கேட்டனர்.

''சாதாரணக் காயம்தான்! ஓடிவரும்போது வெறி பிடித்தவர்களில் ஒருவன் எடுத்து வீசினுன் கத்தியை — உராய்ந்து கொண்டு கீழே விழுந்தது. அது தானே ஒழிய இது ஒன்றும பெரிய காயமில்லை. அதனுல் எனக்கு மயக்கம் உண்டாகவில்லை. இரண்டு நாட்களாக உணவும் கிடைக்காது ஒண்ட இடமும் இல்லாது பயமும் பீதியுமாய் நான் பட்ட பாட்டால் களைப்பு மேலிட்டு விட்டது. உங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்துவிட்டேன்.'' என்று அவன் கூறிய வாசகங்களைக் கேட்டபோது விடாலுக்கே மனம் உருகிவிட்டது.

பழி வாங்க வேண்டுமெனத் துடித்தாலும் ஏழையின் உள்ளத்தில் எப்போதும் பச்சாதாபமும் இரக்கமும் வற்றிவிடுவதில்லையே? அதனுல், சிராக்குக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் ஆழ்ந்த அனுதாபத்தோடு செய்தான்! அவன் மிகவும் பசியோடு இருப்பது பற்றிக் கேட்ட அங்கெல் பரபரவென்று மேசை மீதிருந்த முட்டைகளைக்கொண்டும் ரொட்டி இறைச்சியைக்கொண்டும் சமைக்கலானுள். சர்க்காரின் 'ரேஷன்' அளவு மட்டும் இருந்திருந்தால் இப்போது எப்படி ஒரு உயிருக்கு உதவி செய்திருக்கமுடியும்? என்று எண்ணியவுகை ஒரு பக்கம் அமர்ந்திருந்தான் விடால்! விழுந்த களைப்பாலும், பசி மயக்கத்தாலும் உறங்கிக்கொண்டிருந்த செராக்கைக் கண்டபோது அவனுடைய மனதில் பலவித எண்ணங்கள் உருவாயின. இதே சீமான், என்னைப்போல ஒரு ஏழை நிராதரவான நிலைமையிலிருந்தால் இப்படியெல்லாமா செய்திருப்பான்?- என்று நினைத்தான். புரட்சியால் அல்லவோ இவர்களுக்கு இப்படிப் பட்ட கதியெல்லாம் வந்தது!—என்று எண்ணியபோது, அவனை அறியாமலேயே ஒரு ஆனந்தம் ஏற்பட்டது.

''எவ்வளவோ கொடுமை செய்திருந்தும் அவனை மன்னிக்க வாதாடினுளே—அங்கெல். ஆஹா! அவளுடைய மனம்தான் எவ்வளவு மிருதுவானது ...'' என்று எண்ணியதும், அவனுக்குள்ளாகவே ஒரு பூரிப்பு ஏற்பட்டது. அங்கெலை நிமிர்ந்து பார்த்தான். அந்த அழகுச் சிலை, வியாதியுற்றுக் கிடந்தவனுக்கு உதவ வேண்டுமே யெனும் பரபரப்புடன் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். விடா

அரங்கண்ணல்

லின் மனம் மீண்டும் 'திருட்டுத்தனமாக' உணவுப் பொருள்களை விற்கும் கூடைக்காரியின் மீது சென்றது. அவனையறியாமலே அவன் உள்ளம் அந்த கூடைக்காரி வாழ்க, என்று சொல்லியது. என்னே, ஏழையின் மனம்!

* * *

எல்லோரையும்விட மிகவும் வேகமாகத் தனது எதிரே வைக்கப்பட்ட எல்லாவற்றையும் தின்று முடித்தான், செராக். அவனுடைய கண்களில் இப்போதுதான் புது ஒளி பூத்தது. உடம்பும், தெளிவும் தெம்பும் கலந்து தென்பட்டது. கைகளைக் கழுவிக் கொண்டு அவன் சொன்னுன், ''அப்பப்பா! உலகத்தில் மனிதனுக்கு வேண்டியது என்னவென்று என்னைக் கேட்டால் தங்கு தடையில்லாமல் சொல்லுவேன், அவன் பசியை அடக்கக் கிடைக்கும் உணவுதான் என்று. ஒருவேளை உணவில்லையென்ருல் எப்படியிருக்கிறது? அரைமணி நேரத்துக்கு முன்பு, உயிரையும் உடலையும் காப்பாற்றிக்கொள்ளத் தத்தளித்துத் தவித்தபோது, பேசாமல் நாமே பலி பீடத்துக்குப் போய் ஒரு நிமிடத்தில் உயிரைக் கொடுத்துவிடலாமே என்று நினைத்தேன். ஆனுல் ஒரு கவளம் சாப்பிட்டு உடம்பில் தெம்பு வந்துவிட்டதும், என்ன ஆனுலும் சரி இந்த உலகில் வாழவேண்டும் என்கிற ஆசைதான் முந்திக்கொண்டு வந்து நிற்கிறது. அங்கெல்! விடால்!—உங்களுடைய இந்தப் பேருதவிக்கு என்ன நன்றியைத் தெரிவிபபதென்றே தெரிய வில்லை எனக்கு?''

அங்கெல்லின் இருதயத்தை இந்த வார்த்தைகள் வெகு எளிதில் தொட்டுவிட்டன. விடால் கேட்டான். ''பாரிஸ் பட்டணம்தான் இவ்வளவு அல்லோலகல்லோலப் படுகிறதே. இங்கேன் வந்தாய்?''

''பெரிய முட்டாள்தனம்தான் நான் செய்தது. இங்கே எனக்கொரு மாளிகையிருக்கிறது. அதிலிருக்கும் சொத்துக்களை எடுத்துக்கொண்டு இங்கிலாந்துக்கு ஓடிப்போய்விடலாமென் பதற்காக வந்தேன். மாளிகைக்குள் நுழைந்து பார்த்தால், அது புரட்சிக்காரர்களால் சூறையாடப்பட்டுவிட்டதாகத் தெரிந்தது. மாளிகையின் ஒவ்வொரு பக்கமாகவும் சென்று நான்

பார்த்துக்கொண்டிருக்கையில் எப்படியோ மக்களுக்குத்தெரிந்து என்னை வந்து சூழ்ந்துகொண்டார்கள்! எப்படி இந்தப் பாரிஸ் பட்டணத்திலிருந்து உயிரோடு தப்பப்போகிறேனே எனக்கே தெரியவில்லை......"

தனக்கேற்பட்டுள்ள சூழ்நிலையை அவன் விளக்க விளக்க அங்கெல், எப்படியாவது இந்தப் பரிதாபத்துக் குரியவனைக் காப்பாற்றிவிட முடியாதா? என்று எண்ணலானாள்.

"விடால்! எப்படியாவது இவரைக் காப்பாற்ற முடியுமா உங்களால்?"

"என்னாலா?"

"ஆமாம், விடால்!"

"யோசிப்போம்......"

"யோசிக்க என்ன இருக்கிறது விடால்...!"

விடாலும் உண்மையிலேயே மிகவும் பரிதாபம் அடைந்தான். அதனால் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். நாளைக்கு தேசிய சர்க்காரிடம் படை திரட்டும் அனுமதியைப் பெற்றதும் வீரர்களைப் பொறுக்கும் பொறுப்பு அவன் வசம்தான் இருக்கும். அந்த வீரர்களில் ஒருவனாக செராக்கையும் சேர்த்து அழைத்துக்கொண்டு பாரிசைத் தாண்டி வெளியேறிவிடவேண்டியது. ஹாலந்துக்குப் போகும் வழியில் அவனை இங்கிலாந்துக்கு அனுப்பிவிடவேண்டியது—என்ற முடிவுக்கு வந்தான். அதை வெளியிட்டபோது அங்கெல்லுக்கு மனதில் அமைதி ஏற்பட்டது. செராக்கும், திருப்தி அடைந்தான்.

இரவு ஓடிக்கொண்டிருந்தது. "செராக்! இது மாளிகையல்ல. அதனால் சப்ரமஞ்சம் எதுவும் கிடையாது. இந்தப் படுக்கைதானிருக்கிறது. இதில் படுத்துக்கொண்டு இரவைக் கழியுங்கள்!" என்று சொல்லிவிட்டு கணவனும் மனைவியும் சென்றனர். கையைத் தலையில் வைத்துக்கொண்டு படுத்த செராக் 'அடடா! ஒரு தலையணையிருந்தால் எப்படியிருக்கும்?' என்று நினைக்காமலில்லை. சிறிது நேரத்துக்கு முன்பு உயிருக்கே அல்லாடினான்! இப்போது, சுகமாகத் தூங்க வழியில்லையே என்று ஏங்கினான்!! எவ்வளவு விசித்திரமான மனித சுபாவம்.

## 3

**மலையுச்சியில்** ஏறுவது கடினம்; எப்படியோ அந்த உச்சியில் அமரும்பாக்கியம் கிடைத்துவிட்டதுஎன்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த இடத்தைக் காப்பாற்றிக்கொள்பவனே அறிஞன்! ஆனால், எந்த அறிஞனும், நெடுநாட்கள் மலையுச்சியில் வாழுவது கிடையாது; அதிலும் அரசியல்வாழ்வில் வீடுபட்டோரால் நிச்சயம் முடியாது. சிலருக்குச் சாத்யமாகலாம். அவர்கள்—தற்பெருமையையும் பிறர் தன்னுடைய ஜோதியைக்கண்டு துதிபாட வேண்டுமென்ற அல்ப ஆசையையும் கடந்தவர்களாயிருப்பார்கள். முற்றுந் துறந்தவனெனக் கூறப்படும் முனி புங்கவனிலிருந்து சாதாரணதுகள் வரை எல்லோருக்கும், தான் மற்றவனைவிட சிறப்பாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதில்தான் எவ்வளவு பிரேமை.

அந்தப் பிரேமைக்கு, பலியானான் விடால். மறு நாள் தேசிய அசெம்பிளி கூடுகிற மண்டபத்துக்குச் சென்றான், தான் வந்த விபரங்களைச் சொல்லி, ஆவனசெய்வதற்காக. தேசிய அசெம்பிளியின்முன் கூட்டம் ஏராளமாயிருந்தது. இப்போது 'பிரான்சு' நாட்டின் தலைவிதியை நிர்ணயம் செய்யும் பொறுப்பு அதன் வசமிருந்ததால் ஒவ்வொரு அசெம்பிளி உறுப்பினரும் மிகவும் செல்வாக்கோடு இருந்தார்கள்! மக்களின் பிரதிநிதிகளாயிற்றே? அதனால், தங்கள் பிரதிநிதிகள் ஆட்சி நடத்துவதைக் காணவேண்டுமென்கிற ஆவல் பலருக்கு — அசெம்பிளியில் எப்படிப் பேசுகிறார்கள் என்று காணும் ஆசை வேறு பலருக்கு—கைதட்டி ஆரவாரம் செய்து மக்கள் பிரதிநிதிகளுக்கு ஊக்கமூட்டவேண்டும் என்கிற உற்சாகம் இன்னும் பலருக்கு. இப்படிப்பட்டோரெல்லாம் ஏராளமாகசபைக்குள்ளும்வெளியிலும் கூடிக்கிடந்தனர். சட்டசபையினரைச் சந்திப்பதற்காக வந்திறங்கிய விடால் மீது எல்லோரது பார்வையும் விழுந்தது! அவனுடைய உடையும் கம்பீரமும் எல்லோரையும் கவர்ந்தது.

"சுதந்திர சர்க்காருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வீரப் புதல்வன்" என்று யாரோ சொன்னதுதான் தாமதம், அவனைச் சூழ்ந்துகொள்ளலாயினர் மக்கள். அனைவரும் இப்படிப்பட்ட தளபதிகள், மன்னனுக்கும் பிரபுக்களுக்கு மட்டுமே மரியாதை செய்வதைக் கண்டவர்கள்! முன்பெல்லாம் ராணுவம் இருக்கிறது என்னிடம்—படைத் தளபதிகளைப் பாரீர் இதோ! —என்று சொல்லக் கூடிய அருகதையும் பெருமையும் அரசனுக்கும் சீமான்களுக்குமே இருந்தது. இப்போது ராணுவமும் தளபதிகளும், பொது ஜன ஊழியர்கள்!—இந்த எண்ணமே, ஒரு போதைதானே? இப்படி எல்லோரும் அவனைச் சூழ்ந்துகொள்வதை, சபையின் பாதுகாவலுக்காக நிறுத்தப்பட்டிருந்த வீரர்களின் தலைவன் பார்த்தான். அவனுக்கும் தன்னுடைய பெருமையை விளம்பரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிற ஆசை எழும்பிற்று. ஆகவே, மக்களை விலக்கிக்கொண்டு, விடாலிடம் வந்தான்—விடாலை, முன்பே அவன் அறிவான் "விடால்! என்ன விசேஷம்?" என்றான், கைகுலுக்கியபடி.

விடாலின் 'பெருமை' அவனைச் சும்மாயிருக்க விடவில்லை! தான் வந்திருக்கும் விஷயம் எவ்வளவு முக்கியமானது என்பதையும் — தன்னைப் போன்ற தளகர்த்தர்கள் புதிய குடியரசுக்கு எப்படி யெப்படி சேவை புரிகிறார்கள் என்பதையும்—எல்லோரும் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டுமெனும் ஆசை தலைதூக்கியது, "நண்பனே! மிகவும் முக்கியமான இரண்டு காரியங்களை எடுத்து தேசீய சபையின் முன் பேசப்போகிறேன் நான். ஒரு திருட்டுப்பயல் என்ன செய்துவிட்டான் தெரியுமா? பிரெஞ்சு நாட்டு வீரர்களின் வேதனையில் வேட்டையாடி இருக்கிறான்! அந்தக் கொள்ளைலாபக்காரனின் தலையைக் கொத்திக் குப்பைக் கூடையில் வீச வந்திருக்கிறேன்!!" என்றான், கம்பீரத்துடன். அப்படிச் சொல்லும்போது உண்மையிலேயே அவன் இரத்தம்கொதித்தது அவனுடைய வீராவேசத்தைக் கண்ட மக்கள் வாயைப் பிளந்துகொண்டு அவனை நோக்கி நெருங்கினார்கள். அவர்களுடைய அவசரத்துக்கிடையில் சர்க்கார் காரியாலயத்தில் ஊழியம் செய்யும் ஒரு உத்யோகஸ்தன் அகப்பட்டுக்கொண்டான். அவனும் ஒரு விதத்தில் நாட்டுக்கு ஊழியம் செய்துகொண்டிருப்பவன்தானே! ஆனால், அதை அங்கிருந்த மக்கள் ஏற்கத் தயாராகயில்லை. தங்களுடைய அவசரத்துக்குஇடையூறாயிருந்துவிட்டான் என்பதற்காக ஒருவன், அவனைப் பிடித்துத் தள்ளினான். பாபம்! அந்த அதிகாரி, பரிதாபத்துடன் தள்ளாடிக் கொண்டு அப்பாலே சென்றான். விடாலின் வார்த்தையைக் கேட்டு அவ்வளவு வேகத்துடன் வந்த தேச பக்தன் கேட்டான், "வீரனே! யார் அந்த அயோக்கியன்? என்ன செய்தான் அப்படி?"

விடாலுக்கு இப்போது இன்னும் கொஞ்சம் கம்பீரம் உண்டாயிற்று! "யார் தெரியுமா அந்தத் துரோகி? சர்க்காரின் பணத்தை விரயம் செய்தவன்! மக்களின் சொத்தை மோசம் செய்தவன்! ராணுவ வீரர்களுக்கு வேண்டிய 'பூட்சு'களை 'சப்ளை' செய்து கொண்டிருந்த 'கண்டிராக்டர்.' அவன் என்ன செய்தான் தெரியுமா?" கொஞ்சம் நிறுத்தினான், விடால்.

கூடியிருந்தோர் ஏக சமயத்தில், "என்ன செய்தான்? என்ன செய்தான்?" என்று கேட்டனர்.

"இரத்தத்தைத் தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தத்தம் செய்யும் என்னைப்போன்ற வீரர்களை வஞ்சித்து

கொள்ளை லாபம் அடித்திருக்கிருன்! 'பூட்சுகள்' செய்தனுப்ப 'ஆர்டர்' கொடுத்தோம்—அவன் செய்தும் அனுப்பினுன் காலணிகளை. ஆனல், அந்தக் காலணிகளையெல்லாம் எப்படிச் செய்தனுப்பினுன் தெரியுமா?" கொஞ்சம், நிறுத்தினுன் விடால். ஒரு முறை தொண்டையைக் கனைத்துக் கொண்டு மீண்டும் சொல்ல ஆரம்பித்தான் "தோலால் செய்தால் அதிக லாபம் கிடைக்காதென்று கருதி வெறும் அட்டைகளைக் கொண்டு செய்தனுப்பினுன். கல்லிலும் முள்ளிலும் நடந்தால் வெறும் காகித ஜோடு எப்படித் தாங்கும்? அடடா! அதனல், வீரர்கள் என்னபாடுபட்டார்கள் தெரியுமா? ஒரு சமயம் முன்னேறிச் செல்ல முடியாமல், விரோதிகளின்குண்டுகளுக்குஆளாகிச்சாகவும் நேர்ந்தது-ஆமாம், இந்தப் பாவியால் வீரர்கள் சாகவும் நேர்ந்தது."

"அவன் பெயர்? அவன் பெயர்?" என்று மக்கள் ஆத்திரமாகக் கேட்டார்கள். அவசரம் தன்னை எவ்வளவு தூரம் அடிமை கொண்டுவிட்டது என்பதை அப்போதுதான் விடால் உணர ஆரம்பித்தான். ஆகவே, கொஞ்சம் சமாளித்துக்கொண்டு, 'அவன் யார் என்பதை சட்ட சபையில் சொல்லப் போகிறேன். அதுவரையில் காத்திருங்கள்" என்று தெரிவித்துவிட்டு, மக்களை விலக்கிக்கொண்டு சபையை நோக்கி புறப்பட்டான். அப்போது யாரோ ஒரு ஆள், அவனுடைய முதுகில் தட்டவே விடால், திரும்பினுன். உயர்ந்த உருவமும் கவர்ச்சியான முகமும் அமைந்த ஒருவன் நின்ருன்! விடாலைப் பார்த்து, "கொஞ்சம் இப்படி வா" என்று அழைத்தான்.

"யார், நீ?"

"நானு? என்னை யாரென்று தெரியவில்லையா...நான் தான் ஜெஸ்ட்"

"யார் செயின்ட் ஜெஸ்டா..."

"ஆமாம்!"

விடால் திகைக்கவில்லை; ஆனல் ஆத்திரமடைந்தான். அவனுடைய தலைவன், ஹாலந்திலிருந்து விடாலை அனுப்பியபோது இந்த ஜெஸ்டைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கும்படிச் சொல்லியிருந்தான். ஏனெனில் இந்த ஜெஸ்டுக்கும் அந்தச் செருப்பு வியாபாரிக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருப்பதாகப் பேசப்படுவது தெரியும் ரரணுவத் தலைவனுக்கு. அதோடு, ஜெஸ்டுக்கு அரசியல் நிர்வாகத்தில் நல்ல செல்வாக்குண்டு. சட்டசபையில் அவன் பேச ஆரம்பித்தால் தென்றலும் புயலும் போட்டியிடும். அவ்வளவு அருமையாகப் பேசும் ஆற்றல் வாய்ந்தவன். அவனுடைய பிரசங்க மாரியால், எவரையும் எளிதில் மயக்கிவிடக் கூடியவன், எவ்வளவோ கஷ்டநஷ்டங்களுக்கிடையே பிரான்சு நாட்டுமக்கள் புது அரசு ஒன்றை நிறுவியிருந்தாலும்' அது எத்தகைய ஆட்கள் வசம் சிக்கிவிட்டது என்பதற்கோர் உதாரணமாகயிருந்தான் ஜெஸ்டு! ஏழைகளுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லப்படும் அவனணிந்திருந்த உடைகள், பெரிய பிரபுவைப் போல இருந்தன. ஆடம்பரமான போக்கு அதைப் போட்டிக்கிழுப்பதாக விளங்கிற்று. ஆகவே, விடால் கொஞ்சம் எச்சரிக்கையோடு இருக்க ஆரம்பித்தான்.

"விடால்! நீ சொல்லிக்கொண்டிருந்த வியாபாரி, யார், லெமோரன் தானே?"

"பாம்பின் கால் பாம்புக்குத்தானே தெரியும்! எவ்வளவு எளிதில் உனக்குத் தெரிந்துவிட்டது அவனுடைய பெயர்?"

"இதில் என்ன இரகசியம் இருக்கிறது—மூன்றுமாத காலமாக துருப்புகளுக்கு ஜோடு'சப்ளை' செய்யும் 'கண்டிராக்ட்' அவன் ஒருவன் வசம் தானே உள்ளது. சாதாரண மக்கள் கூட நீயாரைப்பற்றிச் சொல்கிருய் என்பதை அறிந்து கொள்வார்களே ......சரி, கொஞ்சம் இப்படிவா!"

"என்ன?"

"இந்த ஒரு காரியத்துக்காகவா போர் முனையிலிருந்து உன்னை பாரிசுக்கு அனுப்பினர்கள்?"

"இல்லை! இன்னெரு வேலையும் இருக்கிறது"

"அது என்னவேலை?"

"ஹாலந்தில் போராட இன்னும் வீரர்கள் தேவை. அவர்களைச் சேர்க்கவும் சபையின் அனுமதியைக் கேட்கப் போகிறேன்"

"ரொம்பச் சரி! இந்தவேலையை மட்டும் செய்துகொண்டுபோ. வீணுக அந்த வியாபாரியின் விஷயத்தில் தலையிடவேண்டாம்......"

"நீ யார் அப்படி எனக்குக் கட்டளையிட!"

"நாட்டை ஆளும் தேசிய சபையின் உறுப்பினன். நாடு புகழும் ஜோதி—என்னைமீறி சபையால் எந்தச் சட்டமும் செய்ய முடியாது தெரியுமா?"

"தெரியவேண்டிய அவசியமில்லை, எனக்கு. என் தலைவன் இட்ட கட்டளையே எனக்குப் பெரிது"

"அந்தத் தலைவனுக்கும் தலைவன் நான்"

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. சட்டசபையின் அனுமதியைப் பெற வந்தேனே ஒழிய தங்களுடைய உத்தரவை அல்ல. வேண்டுமானுல், உள்ளேபோய் தாங்கள் எல்லாம் ஒன்று கூடி. எனக்கு உத்தரவிடுங்கள்......"

முறைத்துப் பார்த்தான் ஜெஸ்டு! கோபம் அதிகமாயிற்று, விடாலுக்கு, "மக்களுக்குப் பணிபுரிகிறேன் என்று சொல்லி அவர்கள் உணர்ச்சியை உருவாக்கி, அதைக் கொண்டு சுய நலங்களைச் சாதித்துக்கொள்ளும் உன்னைப்போன்ற திருடர்களிடம் தெண்டனிடும் ஆளல்ல நான்! தெரிந்துகொள். நாட்டை, கலிநடனக் காடாக்கும் ஆளல்ல, நான்; இரத்தம் கொட்டி உயிரைத் துச்சமென மதித்து போர்க்களத்திலே உலாவும் ஒரு உண்மையான தேசபக்தன். தெரிந்துகொள்..." என்ருன். சட்டசபைப் பிரதிநிதியின் கண்கள் சிவந்தன! தான் யார்? தன்னுடைய தகுதி என்ன! சட்டசபையே மிரளும் தன் பேச்சு கேட்டு! தன்னை வெகு சாதாரணமாக மதித்துப் பேசுகிருனே இந்த வீரன்—என்று வெகுண்டான். "ஏய்! என் வாயிலிருந்து ஒரு சொல் உதிர்ந்தால் உன் வாழ்வே முடிந்து போகும் ஜாக்ரதை"

"அதையும் பார்ப்போம்—உன் மிரட்டலுக்குஅஞ்சியோடும் ஆமையல்ல நான். மயங்கிச் சாய மக்களும் மதோன்மத்தர்களாகிவிடவில்லை. மக்கள் மன்றத்திடம் சொல்லுவோம், அவ்வளவு திமிரா வந்துவிட்டது. சுயராஜ்ய வீரனே—சட்டசபை உறுப்பினர் என்பதால் அவ்வளவு திமிரா வந்துவிட்டது......அப்பனே! இதோ பார்-போர்க்களத்திலே நான் ஏந்திய காயங்களை. குண்டுகள் துளைத்த போதும் அஞ்சாதவன் நான். உன்னுடைய வெத்து வேட்டுகளுக்கா அஞ்சப்போகிறேன்? ஒருக்காலுமில்லை!"

**இந்தச் சமயத்தில் சட்டசபையின் கதவுகள் திறந்தன. உரத்த குரலில் ஒருவன் சொன்னுன், "கர்னல் விடாலைச் சந்திக்க அசெம்பளி காத்திருக்கிறது."**

(தொடரும்)

## இந்தக் கம்யூனிஸ்டுகள்!

**இந்திய கம்யூனிஸ்டுகள் தங்கள் மனக்கண்ணை மூடி. பண்டைக் காலத்திய கோஷங்களைச் செய்வதில் தங்கள் நேரத்தையும் பலத்தையும் வீணுக்குகிருர்கள். அவர்கள் தேச நிகழ்ச்சிகளை உணர்ந்து பாராட்டவே முடியாமலிருக்கிருர்கள். தீரமும் பெரும் புரட்சித் தன்மையும் வாய்ந்த இந்த கம்யூனிஸ்ட் நண்பர்கள் பெரும் பிற்போக்காளராக மாறிவிட்டனர்.**

**5,000 மைலுக்கு அப்பால் என்ன நடக்கிறதென்பதைக் கண்டுபிடித்து அதனைக் கையாளுவதே புரட்சி என்று நினைக்கிருர்கள்.**

— திருச்சூரில் நேரு.

# பணிக்கரும் அழைக்கிறார்!

"கந்தமூலாதிகளைத் தின்று கொண்டு, காற்றே துணையாய், கையே தலையணையாய், தர்ப்பாசனமும், தருநிழலையும் பெற்று தபோவனங்களில முனிசிரேஷ்டர்களிருந்தார்களே அதுபோல இந்தியா ஆக்கப்படல் வேண்டும்—ஐம்புலன்களையும் அடக்குவீர்! ஆசையைச் சுருக்குவீர்! மாயாவிகார இச்சைகளில் மனதை அலையவிடாதீர்! மகான்களையும் மகரிஷிகளையும் மனதிலே நினைப்பீர்—அவர்கள் சினிமாவையும் சிங்கார வாழ்வையுமா எதிர் பார்த்தார்கள்? 'போலே' காலர் சட்டையும், 'சோளி' ரவிக்கையுமா தேடினார்கள்! ஆடம்பரங்களில் மனதை அலையவிடாதே-கடிவாளம் பூட்டு உன் ஆசைகளுக்கு. கண்டபடியெல்லாம் போகக்கூடாது! ஏனெனில், நம்முடைய கலாச்சாரம் சாதாரணமானதோ? இந்திய கலாச்சாரம் என்றால் எவ்வளவு கீர்த்திபெற்றது தெரியுமா? அந்நிய நாட்டினர், ஆயிரமாயிரம் விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கக்கூடும். அவர்கள் எவ்வளவு பெரிய புதுமைகளைத்தான் கண்டுபிடிக்கட்டும், நம்முடைய பெருமை அவர்களுக்கு ஏது? இகலோகம் ஒன்று குறித்துமட்டுமே அவர்கள் அறிவரேயன்றி, பரலோகம் செல்லும் பாதை காண வழி தெரியுமோ? அதுமட்டுமல்ல, நம்முடைய தபோதனர்கள், நாம் எப்படி வாழவேண்டுமென்று வகுத்துள்ளார்கள் தெரியுமா! ஆசையை அகற்று!—என்றார்கள். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!—அடடா எவ்வளவு அருமையான, வாக்கியம். எளிய வாழ்க்கையை மேற்கொள்! — இதுபோன்ற உத்தம மார்க்கம் உரைத்தோர் உண்டோ, பிறநாட்டில்? எண்ணங்களைப் பெரிதாக்கு—ஆகா, எளிய வாழ்க்கை, உயர்ந்த லட்சியம். அப்போதுதான் அறம் மலரும்! வீடுபெறும் சன்மார்க்கம் தெரியும்—உயர்ந்ததோர் ஒளி உள்ளத்திலே பூக்கும்—நிர்மலன் அருள் கிடைக்கும். நீ அதைத் தேடு—தினம், அதைப்பெற—நாடு. முன்னோர்கள் காட்டிய முக்தி மார்க்கத்தினும் சிறந்ததோர் மார்க்கமுண்டோ இவ்வுலகில்? சித்தமடக்குதலும், சிவாய நம என்று செபித்தலும், உள்ளதே போதுமென்று திருப்திகொள்ளும் ஆத்ம பரிசுத்தத்துக்கு எவ்வளவு அவசியம் தெரியுமோ! விமானம் பறக்கலாம் — விதவிதமான குண்டுகள் கண்டுபிடிக்கலாம்—விசித்திரமான விஞ்ஞானப் புதுமைகளைக்கூடக் கண்டுபிடிக்கலாம் — அதனால் என்ன? விஞ்ஞானம்! விஞ்ஞானம்!! —என்று வியந்துரைக்க முடியுமே தவிர, அஞ்ஞானம்போக்கி, மெய்ஞ்ஞானம் தேடச் செய்யும் வழிகளை உரைப்பது யார்? நமது தபோவனர்கள்! நம்முடைய இந்து மார்க்கம்!" — என்பதாகப் பேசுவோர் இருக்கிறார்களல்லவா, நம் நாட்டில், அவர்களுக்குச் சரியான கசையடி கொடுத்திருக்கிறார் கே. எம். பணிக்கர்.

ஏதய்யா, நீங்கள் குறிப்பிடும் அந்தக் காலத்தில்கூட ராஜாதி ராஜன் எங்கே தபோவனத்திலிருந்துகொண்டா, அரசு புரிந்தான்? அந்தக்காலத்து மக்கள் எல்லோரும், தபோவனத்திலிருந்துகொண்டு, முற்றுந் துறந்த முனிவர்களாகவா இருந்தார்கள்? ஏதோ, இங்கொன்றும் அங்கொன்றுமாக சில வனங்களும், அங்கங்கே சில ரிஷிகளும் இருந்ததாக அறிகிறோமே ஒழிய, நாடு முழுமையும் அப்படியா இருந்தது? கந்தமூலாதிகளைத் தின்பதும், கௌபீனம் அணிந்துலவுவதுமே போதுமென்று இருந்தார்கள்? சப்த ரிஷிகள் என்று கொண்டாடப்படுவோர் கூட தங்கத்தால் நெய்த ஆடைகளையும், முத்துக்கள் கோத்த அணிகளையும் அணிந்திருந்ததாகக் காளிதாசன் எழுதியிருக்கிறானே! அவர்களுக்கும் மேலான, ஆண்டவர்களைத்தான் பார்ப்போமே? யார், எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள் —சிவனைத் தவிர. விரலைமடக்க முடியுமா? எல்லாக் கடவுளர்களும், பீதாம்பரதாரிகளாயும், ஆடம்பரத் தோடும்தானே காட்சியளிக்கின்றனர். அந்தக் காலம்! அந்தக் காலம்!—என்கிறீர்களே, அந்தக் காலத்தில் நகரங்களும் இல்லாமலாயிருந்தன. ஏதோ, எல்லாம் அந்தக் காலத்திலிருந்ததாகவும், அந்த வாழ்க்கையை, இடையிலே ஏற்பட்ட கால மாறுதல்கள் கலைத்துவிட்டுப் போய்விட்டதாகவும் கதைக்கிறீர்களே? — என்று காரசாரமாகக் கேட்கிறார், பணிக்கர்.

கேட்பது மட்டுமல்ல, போராட வாரீர், என்றும் அழைக்கிறார்! புத்துலக வாலிபர்களே, இப்படிப் பட்டவர்களின் போதனை—நம்மைச் சாகடிக்கும் விரோதியைப்போல! அதற்கு இடம் கொடுத்தால், ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் அறியாமை, குறுகிய மனோபாவம், கற்பனைப் புரட்டுகள் நம்மை, எங்கோ இழுத்துச்சென்றுவிடும் அதை எதிர்த்துப் போராட ஒவ்வொருவரும் ஒன்று சேருவீர், என்று அழைக்கிறார்.

பணிக்கர், சுயமரியாதைக்காரரல்ல — பண்டித நேருவின் பாசத்தையும் நேசத்தையும் பெற்

றவர்—பல கலைகளையும் அறிந்தவர்—நூலாசிரியர்—காங்கிரஸ்காரர்களால் கொண்டாடப்படும் அருகதையைப் பெற்றவர்—அவர், இவ்வண்ணம் தெரிவிக்கிறார், தாகூரின் சாந்தி நிகேதனத்தில், அண்மையில் பேசியபோது.

*

ஆத்மார்த்தீகத்துறையில் மட்டுமல்ல, இப்படி எளிய வாழ்க்கை போதிப்போர் இருப்பது! அரசியலிலும் கூட, எளிய வாழ்க்கையே இன்ப சுகம்தரும், இதுதான் காந்தீயப் பொருளாதாரம், என்று கூறியவண்ணம் உள்ளனரே பலர் அவர்கள் போக்கையும் கண்டிக்கிறார்.

பழமை விரும்பிகள், மதத்துறையில், மார்தட்டுகிறார்கள்—என்னதான் வெளிநாடு முன்னேறிவிட்டாலும், நமது புராதனப் பண்பாட்டோடு போட்டிபோட இயலுமோ; அதன் எளிமையும், அடக்கமும் கிடைக்க முடியுமோ, என்பதாக.

அந்த மதவாதிகளையும் மிஞ்சுவதுபோல, அரசியலிலேயுள்ள 'ஆச்சாரியார்'கள் சங்கநாதம் செய்கின்றனர்—இந்தியாவின் இருதயம் எது? எளிய வாழ்க்கை. அது எங்கே குடிகொண்டிருக்கிறது? கிராமங்களில்! அந்தக் கிராமங்களை முன்னேறச்செய்ய, நவ நாகரீகப் பாணிகளைக் கைக்கொண்டால் இயலாது—முழுக்க முழுக்க இந்தியப் பாணியே கையாளப்படவேண்டும்! அதாவது, பழைய காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும், உழவர், உழுது அறுத்து வந்து தருவர் தச்சர்கள் மரசாமான்களைச் செய்து தருவார்கள், மண்வெட்டி போன்ற இரும்புச் சாமான்களைச் செய்வது கொல்லர்களின் வேலை, சேணியர்கள் ஆடைகளை நெய்து தருவார்கள், இதுபோல வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் மார்க்கம் இருந்தது! அதுபோல, மீண்டும் கிராமங்களை உண்டாக்க வேண்டும்—அனைவரும், இடையில் உண்டான கால மாறுதலால் மாற்றம் பெற்றுவிட்டனர். அதனால், அந்தந்த தொழில்கள் சிதறிவிட்டன — அவைகளுக்குப் புத்துயிரளித்து கிராமத் தேவையை பூர்த்தி செய்துகொள்ள வழி கூறவேண்டும் என்பதே, காந்தீயப் பொருளாதாரம், அது நடைமுறைக்கு வர, கைத் தொழில்களைப் பெருக்குவீர்! எந்தத் தொழில்களாயினும், அவை கைத்தொழில்களாக உருப்பெறட்டும் — அவைகளை, வளர்ப்பதே முக்கியம்—அப்போதுதான் எளிய வாழ்க்கை மலரமுடியும்! எளிய வாழ்க்கையே, நமது ஐதீக முறை, என்கிறார்களல்லவா அவர்களைப் பார்த்துக் கேட்கிறார், பணிக்கர்—“ஐயன்மீர், காலஓட்டம் எவ்வளவு மாறுதல்களைச் செய்திருக்கிறது. பழைய முறையிலேயே கிராமீய வாழ்க்கையைத் திருத்தி அமைத்துவிட்டால் போதுமென்கிறீர்களே? இயலுமா? சாத்யமா, அப்படிச் செய்வதால், என்ன ஏற்படமுடியும்? உலகின் ஒவ்வொரு பாகங்களில் ஆலைகள் சுழலுகின்றன! தொழிலியந்திரங்கள், சுற்றிக்கொண்டே உள்ளன. அதனால், புதுப்புது முறைகள் வந்துவிட்டன ஏராளமான நகரங்கள், தோன்றியிருக்கின்றன. நாள் முழுதும் முன்பெல்லாம் உழைத்து உற்பத்தி செய்வதை சில மணி நேரத்திலேயே, இப்போது தயாரிக்க முடியும். அதனால், மனிதனின், உழைப்பு சுருங்கிவிடுகிறது. ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைக்கிறது. அவன் முன்புபோல, நாளெல்லாம் உழைத்து நைந்துமெலிந்து சிதைவதற்குப்பதில், கொஞ்சநேரம் உழைத்துவிட்டு, மீந்த நேரத்தில் மனைவி மக்களுடன் இன்பவாழ்க்கையை நடத்துகிறான்! வேண்டிய வசதிகளும் பெறுகிறான்.

வாழ்க்கையின் துறைகளில் பரவிவரும் விஞ்ஞானப் புதுமைகளை அனுபவிக்கிறான் — அதுபோல, நமது கிராமங்களையும் ஆக்க முயற்சிப்பது அறமா? அழகா? அல்லது, எளிய வாழ்க்கையே எமது ஐதீகம், அதுவே, இந்த மண்ணுக்கு ஏற்றது; எனச் சொல்லி, பழைய வழியிலேயே, நாடு இழுத்துச் செல்லப்பட வேண்டுமென்பது நல்லதா?” என்று கொஞ்சம் காரமாகவே கேட்கிறார்.

எளிய வாழ்க்கை குறித்த மதவாதிகள் போதனையையும், அரசியல் வாதிகள் போக்கையும் பணிக்கர் கண்டிப்பது, பலருக்குத் திகைப்பை உண்டாக்கச் செய்யும்.

ஏனெனில், மதத்துறையிலிருக்கும் மடாதிபதிகளும், சங்கராச்சாரிகளும் அடிக்கடி வலியுறுத்துகிறார்கள், எளிய வாழ்க்கையை! அதனால், சினிமாவுக்குப் போகக் கூடாது—சிறந்த நாகரீக சாதனங்களில் மோகம் கொள்ளக்கூடாது—சட்டை போடக்கூடாது—'கிராப்' வைத்துக்கொள்ளக் கூடாது, என்பதுபோன்ற சிறு விஷயங்களைக் கூடக் கண்டிக்கத் தவறுவதில்லை

*

அவர்தம் வாக்கியமே சாலச் சிறந்தது எனக்கருதும், அரசியல் ஆச்சாரியார்கள், நாட்டின் பொருளாதாரத் துறையில் நல்ல மறுமலர்ச்சிகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், ஆலை ஏன்! உலக்கை உரல் போதாதா! இயந்திர சாலைகள், ஏன்! அது பெருகினால் கிராமக் கைத்தொழில்கள் நசித்துவிடுமே! புதிய முறைகளைப் புகுத்தினால், ஏராளமான பேருக்கு வேலை கிடைக்காமல் போய்விடுமே —என்று வாதம் செய்ய முன்வருகிறார்கள். அந்த விபத்தைப் போக்குவதென்றால், கிராமப் புறங்களில் வாழும் எல்லோருக்கும் தொழிலும் வேலையும் கிடைக்க வேண்டுமென்றால், பழைய கைத்தொழில்களைப் புதியபொலிவுடன், நிர்மாணித்துவிட்டால் போதும்! அது நமது பொருளாதாரத்தைச் சமம் செய்துவிடும்! ஆலையும் வேண்டாம் — இயந்திர சாலையும் தேவையில்லை —ஏனென்றால், நமது மக்கள் அதற்கெல்லாம் ஆசைப்படமாட்டார்கள் — எளிய வாழ்க்கையே இவர்களது ஐதீகம், என்று கூறுகிறார்கள்.

அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார் பணிக்கர்—**இப்படி எளிய வாழ்க்கை! எளிய வாழ்க்கை!! என்பது வறுமைக்கு அடிபணியும்படிச் செய்வது,** என்பதாக.

**தபோவன வாழ்க்கைக்கு நாடு செல்ல வேண்டுமென மதவாதிகள் கூறுவதைப் போன்றதே, இந்தப்போக்கு—என்கிறார்**

இந்தியாவில் கிராமங்களுக்குள்ள முக்கியத்தை யாரும் மறுக்க முடியாது. அதைப்போல, கிராமப் புறங்களில், கலையழகுடனும், கைத்திறமையுடனும் செய்யப்படும் சிறு தொழில்களுக்கு ஆதரவளிக்கப்பட வேண்டுமென்பதிலும் ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்த அரசியல் வாதிகள், இந்தளவோடு நிற்கிறார்களா என்றால் இல்லை! அவர்கள், நகர நாகரீகத்தையே குறை கூறுகிறார்கள்—தேவைகளைக் குறைத்துக் கொண்டு, எவ்வளவுக்கெவ்வளவு எளிமையாக நடக்க முடியுமோ, அப்படி வாழ்வதே இந்தியாவின் புராதன முறை—

அதுவே, இந்தியாவுக்கு ஏற்றது என்று சண்டைக்கு வருகிறார்கள். இது, வெகு நூதனமாக இருக்கிறது எனக்கு! பிற்போக்குத் தனமானது என்றும் கருதுகிறேன் நான்!!" என்கிறார்.

அவர் மட்டுமல்ல, கிராமங்கள் யாவும் நகரங்கள் அனுபவிக்கும் அவ்வளவு சலுகைகளையும் பெற வேண்டும், நாட்டுப்புற வாழ்க்கைக்கும் நகரத்து வாழ்க்கைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் குறைய வேண்டுமெனக் கருதும் எவரும், இந்த எளிய வாழ்க்கை சித்தாந்தத்தை ஏற்க மறுக்கவே செய்வர்,

"எளிய வாழ்க்கை நடாத்த வேண்டுமென்று போதிப்பது தப்பித்துக்கொள்ளும் வழியே ஒழிய, தவிக்கும் நாட்டை வளமுள்ளதாக்குவதோ, அந்த வளத்தை மக்கள் அனுபவிக்கும்படிச் செய்வதோ அல்ல" என்றும் தெரிவிக்கிறார், பணிக்கர். ஆலைகள் உருள வேண்டும்! உற்பத்தி பெருக வேண்டும் ஒவ்வொருவனும் செல்வவானாக ஆகவேண்டும்!—என்பது தான், புதுமை விரும்பிகளின் ஆசை. அதற்கு, இடையூறு செய்வதுதான், எளிமையாக வாழ வேண்டுமென்று இவர்கள் செய்யும் போதனை எனவும் தெரிவிக்கிறார் அவர்.

எளிய வாழ்க்கை! போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!—என்று போதிக்கும் மதவாதிகளும், அவர்களுடன் இரண்டறக் கலக்கத் துடிக்கும் போலிப் பொருளாதாரவாதிகளும், அடிக்கடி கூறுகிறார்களல்லவா — வெளியாரைப் போல நாமும் வாழ முயன்றால், நமது அடிப்படை சாய்ந்துவிடும். நமக்கென்று தனியான அடிப்படை உண்டு! அது, நமது பெரியவர்கள் வழங்கியது! ஆத்மார்த்திகமே, அதன் மூலதனம்! — என்பதாக. பணிக்கர் கேட்கிறார், உலகத்தின் பிற **இடங்களை விட எந்தவகையில் நமது ஆத்மார்த்தீகத் துறை சிறந்தது என்று சொல்லப்படுகிறது? சமூகத்தைத் திருத்தியமைக்க மேனாட்டினர் செலுத்திய சிந்தனையைப் போல இல்லாது நமது பெரியவர்கள் ஆன்மா ஆன்மா என்று அலைந்தார்களே அதனாலா? அல்லது இகலோகம் என்னப்பா, இதற்காக ஏன் சிந்தையைச் செலவழிக்கிறாய், பரலோகம் நாடப் பாதையைப் பார், அதுவே நித்தியம் என்று வெளிநாட்டினர் புதிய புதிய எண்ணங்களை உருவாக்கியபோது சொல்லிக்கொண்டிருந்தார்களே அதனாலா?** எந்தவிதத்தில் உயர்ந்தவை இவை?"

இந்தளவோடு நிற்கவில்லை பணிக்கர்—உலகம் சுற்றிவந்தோம் நாம், நமது வார்த்தைகளுக்கு நல்ல மதிப்பிருக்கிறது எனும் காரணத்தினால், சர். சி. பி. இராமசாமிகளும் டாக்டர் இராதாகிருஷ்ணன்களும் கூறுகிறார்களல்லவா, நம்முடைய ஆன்மீக வழியே அனைத்திலும் சிறந்தது; மேலைய நாடுகள் விஞ்ஞானத்துறையில் வளர்ந்திருக்கின்றனவே ஒழிய, ஆத்மீக வளர்ச்சியில் பிற்போக்கு அடைந்துள்ளன; அந்த வகையில் சிறந்த இடம்பெற்றிருப்போர் நாம்தான் என்பதாக. பணிக்கரும் பல்கலை கற்றவர் தானே, சீனாவிலும் எகிப்திலும் தூதராக இருந்திருக்கிறார், சிறந்த நூலாசிரியரெனும் புகழுரை பெற்றுள்ளார், பாண்டித்யமும் பெற்றவர் அல்லவா? அதனால், இன்னும் ஒரு படி மேலே சென்று அவர்களைப் பார்த்துக் கேட்கிறார், "ஆத்மீகத் துறையானாலும் சரி, அறிவுத்துறையானாலும் சரி, எதிலும் நாம் சிறந்தவர்கள் என்பதை என்னால் ஒப்புக்கொள்ள இயலவில்லை. உலகத்தைவிட சிறந்தோர் நாம் என உரிமை கொண்டாடுவது நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வதைத் தவிர வேறில்லை"

சிலருக்குக் கசக்கக்கூடும்—சன்மார்க்கசீலர்களாக உலவுவோருக்கு எரிச்சலெழக்கூடும்—ஆச்சாரிய சுவாமிகளுக்கு அதிர்ச்சிகூட ஏற்படலாம் — சொல்லுவது சுயமரியாதைக்காரரல்ல, பணிக்கர்!

ஆத்மீகத் துறையில் அவர்கள் எல்லாம் வளரவில்லையெனின், ஆண்டாண்டு காலமாக அங்கே பரவிக்கிடக்கும் கிருஸ்து மதக் கருத்துக்கள் வெற்றிபெறவில்லையென்றா, சொல்கிறார்கள்? விசித்திரமன்றோ இது! யார் ஏற்றுக்கொள்ள முடியும்!

வாதத்துக்கு, ஆத்மீகம், அதிக அளவுக்கு வளர்ந்துள்ளதாகவே வைத்துக்கொள்ளுவோம் அதனால் என்ன? ஐரோப்பாவைவிட, வாழ்க்கைப் போராட்டங்களும், மேலிருப்பவனை எதிர்த்துப் போராடும்வேக உணர்ச்சியும் இங்கே வளராமல் போய்விட்டதா! அல்லது, அவைகளை அரும்பிலேயே நசுக்கும் வேலையில்தான் ஆத்மீகம் வெற்றி பெற்றிருக்கிறதா!—இரண்டும், கிடையாதே; மறுக்க முடியுமா, என்று கேட்கிறார் பணிக்கர்.

**"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், வேதங்கள் எவ்வளவு உபதேசங்களைச் செய்திருந்தாலும், தனிப்பட்ட ஞானசிரியர்கள் அதன்படி நடந்து காட்டினாலும் அதை எதிர்த்து நிற்கும் இயக்கம் பிற நாடுகளைவிட மிகப் பெரிதாகவே நமது நாட்டில் உருவாகியிருக்கிறது."**

ஆகவே, தபோவனத்து வாழ்க்கை முறை வேண்டுமென்று விவேகிகளென்போர் கூறுவதும், எளிய வாழ்க்கைக்கே இந்நாட்டு கிராமங்கள் பண்பட்டவை என்றுரைப்பதும், பொருளாதாரப் புரட்சி மிகவும் சாதாரணமான அளவிலேயே இருந்துவிட்டால் போதுமானதெனக் கருதுவதும், அர்த்தமற்றதாகும்! அதிலும், புது இந்தியா, முன்னேற வேண்டுமென்று முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தில் இந்தக் கூற்றுக்கள், ஏற்றுக்கொள்ள முடியாததாகும்!

* * *

இந்தியா பழைய பாதையிலேயே சென்றுகொண்டில்லை. புதிய நாகரீகத்தின் எழுச்சியை எதிரொலிக்க ஆரம்பித்திருக்கிறது.

*

**எளிய வாழ்க்கையே நமது ஐதீகம்! எனும் போதனை, நாம் செய்ய விரும்பும் சாதனைகளுக்குச் சிறிதும் ஒவ்வாதது.**

*

**நாகரீக உலகுக்கு மேற்கு நாடுகள் வழங்கியிருக்கும் புதுமைகளை நாம் புறக்கணித்துவிட முடியாது.**

*

**புதிய இந்தியா, மனுவின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வாழவில்லை!**

*

**எத்தனையோ ஆண்டுகளாக. இந்து மதம் போற்றிக் காத்து வரும் சமூகக் கருத்துக்களை, ஏற்கும் நிலையில் இல்லை.**

*

**மேல்நாட்டு சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் நமது இருதயத்தைக் கவர்ந்திருக்கின்றன.**

* * *

ஆகவே, அனைவரும் வாரீர்! ஒவ்வொருவரும் போராட வாரீர்! கவைக்குதவாத, இந்தக் கண் மூடித் தனமான, பிற்போக்கு வாதத்தை முறியடிப்போம்—அப்படிச் செய்யாவிடில், அது வளர்ந்து நம்மையே விழுங்கிவிடும்! புதுயுகம் நோக்கி நடக்க நாம் புறப்படும் போது, இந்த சக்திகள் அரசியலிலானாலும்சரி, மதத்துறையிலானாலும் சரி, நமது முயற்சிக்கு ஊறு தேடும் வகையிலேயே இருக்கின்றன.

எளிய வாழ்க்கை! இந்து தர்மம்! ஆத்மீக பழமை!—என்று, முலாம் பூசிய, நஞ்சைக் கொடுக்க முன்வருகின்றனர்.

மணியோசை கேட்கிறது — இந்தப் பாசிகளை நீக்கிவிட்டு, மார் தட்டிக் கிளப்பவேண்டும் வாலிபர்கள்! அதுவே, முக்கியம்! இன்று நாம் அவசியம் செய்யவேண்டிய காரியம்!—என்று, அழைக்கிறார் வாலிப உலகை.

இதே அழைப்பைத்தான், அனுதினமும் இந்நாட்டு மக்களுக்கு விட்டுவருகிறோம், நாம்.

எனினும், பணிக்கர் 'அந்த வட்டாரத்து செல்லப்பிள்ளையாக' இருப்பவர் கூறுவதால், ஏறுதார் காதிலாவது ஏறுதா, என்று எதிர் பார்க்கிறோம்.

ஏனெனில், அன்பர் ஆச்சாரியார் போன்றவர்கள் தாம் இத்தனை காலமும் செய்த தேச சேவையை விட மகா பாரதத்தையும், இராமாயணத்தையும் மக்களுக்குப் புரியும்படி எழுதியதே பெரிய தேச சேவை என்று எழுதுகிறார்கள்.

அவருடைய சகாக்களாகயிருக்கும் காங்கிரஸ் தியாகிகளோ, காந்தீயப் பொருளாதாரமே, நாட்டுக்கு ஏற்றது — எளிய வாழ்க்கையே நமக்கு வேண்டியது என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.

ஆளும் அரசோ 'அம்பர்' சர்க்கார் மூலம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிடலாம்— ஏனெனில், அது ஒரு குடிசைத் தொழில் என்று கூறி வருகிறது.

இத்தகைய நிலையில், பழைமை நாடுவோர் சிந்தனையில், தெளிவேற்பட பணிக்கர் பேச்சாவது பயன் படாதா வாலிபர்களாவது உண்மையை உணரமாட்டார்களா, என்றே எதிர்பார்க்கிறோம்.

★

# பணவரசரின் பவனியில்!

ஆண்டொன்றுக்கு 200 கோடி ரூபாய் வருமானமுள்ள சவூதிஅரேபிய மன்னர் சென்ற இடமெல்லாம் பணத்தை அள்ளியிறைத்து விட்டுப் போனார் எனும் செய்தியைக் கேட்டபோது பலருக்கு வியப்பாகவே இருந்தது! மனிதர், இவ்வளவு தாராளமாக இருக்கிறாரே என்பதால் அல்ல— கோழிக்கு ரூபா 3000, கோதைக்கு ரூபா 5000 என்று கொட்டிக் கொடுக்கிறாரே, இக்கோமான், இப்படிப்பட்டவருடைய நாட்டில் வாழும் மக்கள் எவ்வளவு 'அதிர்ஷ்டம்' செய்தவர்களாயிருக்க வேண்டும். வேண்டுமளவுக்குப் பொன்னும் பொருளும் அளிப்பார் போலும் — கோழி செத்ததற்கே ரூபாய் மூவாயிரம் கொடுத்தவர், தன்னாட்டு மக்களுக்கு, துயரம் துடைக்க எவ்வளவு கொடுப்பார், அவரின் கீழிருக்க அவர்கள் எத்தகைய பாக்யம் செய்திருக்க வேண்டும் என்கிற நினைப்பால்!

அதுபோல, இல்லையென்று தெரியக்கூடியசெய்திகிடைக்கிறது 'தினமணி' மூலம்.

மக்கள் மட்டுமல்ல, சவூதி மன்னருடைய அதிகாரிகள்—அதிலும் அவர் இந்தியாவுக்கு வரும் போது அழைத்து வந்த அதிகாரிகள் என்றால் சாதாரணமானவர்கள் என்று கருத முடியும்?-பெரிய அதிகாரிகளின் நிலைமையே, அகப்பட்ட இடத்தில் சம்பாதிப்பது தான் போலும்!

சவூதி அரேபிய மன்னர் பெங்களூருக்கு வந்தபோது, அவருடைய பரிவாரத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள், சிக்குப்பேட்டையில் பேரம் செய்ய வந்தார்களாம்! அதுவும் சிக்குப்பேட்டைக் கடைத் தெருவுக்கே வந்தார்களாம்!

மூட்டை மூட்டையாகத் தங்கள் வசமிருந்த தங்கத்தை விற்றுவிட்டு, பணம் சம்பாதிக்கும் ஆசையுடன்—'பஜாருக்கே வந்துவிட்டார்களாம்! வெளிநாட்டார், இன்னொரு நாட்டுக்கு வரும்போது இவ்வளவு பணம்தான் வைத்துக்கொள்ள வேண்டும் — இந்த அளவுக்குத் தான் நகைகள் போட்டிருக்க வேண்டும்—என்றெல்லாம், தடைகள் இருக்கின்றன அல்லவா? கௌரவ விருந்தினராக வருபவர்களுக்கு இந்தச் சோதனைகள் எல்லாம் இருக்காது என்று அறிந்த அதிகாரிகள், அங்கிருந்து தங்கம் தங்கமாக விமானங்களில் கொண்டு வந்துவிட்டனர்போலும்! சவூதி அரேபியாவைவிட, இங்கு தங்கத்துக்கு விலை அதிகம்— லாபம், நிறைய வருமல்லவா? அந்தப் பேராசை அதிகாரிகளுக்கு!

இந்திய உபகண்டத்தின் பல பகுதிகளிலும், பயணம் சென்று வந்த இவர்கள் எப்படியெப்படியோ சமாளித்துக்கொண்டார்கள் போலும்—அந்தத் துணிச்சலில் பெங்களூருக்கு வந்ததும், நேரடியாகக் கடைத்தெருவுக்கே போயிருக்கிறார்கள், பேரம் பேச! செய்தி சுங்க இலாகாவுக்கே எட்டவே, விரைந்து வந்து, அவர்கள் வசமிருந்த தங்கத்தையும் பணத்தையும் கைப்பற்றிவிட்டார்கள். கந்தனும், முத்தனும் இந்த வேலையிலிறங்கி இருந்தால் உடனே கைது செய்யமுடியும்— அவர்கள், விருந்தினரின் விசேட அதிகாரிகளாயிற்றே! அதனால்,பறிமுதலோடு நின்று போய்விட்டதாகத் தெரிகிறது!

தங்கம் எவ்வளவு தெரியுமா? **510** தோலா! அவர்கள் வசமிருந்த இந்திய நோட்டுகள் எவ்வளவு தெரியுமா? ரூபாய் நாற்பதாயிரம்!

"இந்தியாவுக்குப் போகிறோம்— அங்கிருந்து ஏராளமான லாபம் சம்பாதிக்கலாம்" என்று இந்த அதிகாரிகள், சவூதி அரேபியாவிலுள்ள வியாபாரிகளிடம் எப்படிப் பேரம் செய்து வந்தார்களோ, என்னவோ! கடைசியில், அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

பண்டித நேருவுக்குக் கிடைக்கும் சகாக்களின் 'ரகத்து'க்கு இது ஒரு நல்ல உதாரணம். கம்யூனிஸ்டு தலைவர்கள் வந்துபோனதும், முதலாளிகளைக் 'குஷி'படுத்த ஒரு பண அரசர் பவனிக்குக் கொண்டுவரப்பட்டார்! அந்தப்பவனியில், இந்த அசம்பாவித சம்பவம் நடந்திருக்கிறது!!

★

# 'கருமிகள்' கதை!

இன்று உலகெங்கும் வியாபித்து நிற்கும் சக்தி எது தெரியுமா?—பணம்! 'பணமில்லாதவன் பிணம்!!' இன்று பணத்தைக் கொண்டே மக்களைக் கணிக்கிறார்கள், மதிப்பளிக்கிறார்கள். இலட்சம் இருந்தால்—இலட்சாதிபதி. கோடி பெற்றுவிட்டலோ ஈஸ்வரன்—கோடீஸ்வரன்.

இவ்வித 'மக'த்தான பணத்திற்கு அடிமையானவர்களைக் 'கருமி' என்போம். அந்தக் கருமிகளின் சில, விசித்திரமான விபரங்கள்.

* * *

ஜான் செல்வன் மக்மிலன் சமீபத்தில் ஜோகானஸ் பர்க்கில் இறங்கும் போது அவரிடம் பெறுமதி எவ்வளவு தெரியுமா? 6-ஷிலிங் 4-பென்சும், 5-ஷிலிங் பெறுமானமுள்ள கந்தலாடையும்தான்! அவர் இறக்கும் பொழுது எவ்வித உறுதியும் விட்டுச் செல்லவில்லை. ஆனால் பின்னால் அவர் 156, 300 பவுன்களுக்கு உரிமையாளன் என்று அறிந்தவுடன் உலகமே பிரமித்தது!

உலக சரித்திரத்தை உற்று நோக்கினால் இது எவ்வித அதிசயமுமில்லை. இவனிலும் எத்தனையோ 'மகா' பணப் பித்தர்கள் இருந்திருக்கிறார்கள்.

*

1939-ம் ஆண்டு பக்கிங்காம் ஷையரிலுள்ள ஹெயர்பீல்டில் ஒருவர் இறக்கும்பொழுது தனது மூன்று மருமக்களுக்கும் 30,000 பவுன்கள் சொத்தைவிட்டுச் சென்றார். இவை அவர் 75-வருடங்கள் 'கஞ்ச'த்தனமாக சேமித்து வைத்தவை. எப்படிச் சேகரித்தார் தெரியுமா?

கந்தலாடையே அணிவார். காலையில் இரண்டு மணிக்கு எழுந்து வேலைக்குச் சென்றுவிடுவார். ஏன் தெரியுமா? புகைவண்டியில் சென்றால் பணம் விரயமாகிவிடும்! எனவே கால்நடையாகவே பல மைல்களைக் கடப்பார். மெழுகுவர்த்தியைத் தவிர வேறெவ்வித விளக்கையும் பாவிக்கமாட்டார் இந்தக் கனவான்'

முதலாவது மகாயுத்தத்தின் பொழுது தனது இல்லத்தில் 1,500 பவுன்களை, எங்காவது யுத்தத்திற்குப் பயந்து ஓடவேண்டுமென்றால் கொண்டு செல்வதற்குத் தயாராக வைத்திருந்தார்.

ஒரு முறை தனது மருமகனிடம் 100-பவுன் எடுத்துவரச் சொன்னார். அது வந்தவுடன் உடனேயே சென்று பாங்கில் திருப்பிக் கொடுத்து வரச்சொன்னார், ஏனெனில் அவர் பணம் எடுத்துவரச் சொன்னது பாங்கில் அப்பணம் பத்திரமாக இருக்கிறதாவெனப் பரிசோதிப்பதற்காகத்தான்.

அவர் வாழ்வில் கண்ட ஒரே ஒரு சுகம் என்ன தெரியுமா? அதிசயப்படாதீர்கள்!—பிரேதப் பெட்டி. அவர் சாவதற்கு 16-வருடங்களுக்கு முன்பு தனக்களவான சலவைக்கல்பிரேதப்பெட்டிசெய்து வைத்திருந்தார். ஏனெனில்தனக்கு வெகு விமரிசையாக 'கடைசிச் சடங்கு' நடைபெற வேண்டுமென்ற ஆசையால்தான்!

*

1933-ம் வருடம் நியூயார்க்கில் ஒரு பெண்—பிச்சைக்காரியாகவே காலங் கடத்தியவள்—தான் சாகும் பொழுது 45,000 டாலர்கள் விட்டுச் சென்றாள். 4,000 டாலர்கள் பாங்கிலும் மிகுதி 41,000 டாலர்கள் குடிசைக்குப் பின்புறம் ஓர் கிடங்கில் புதைத்தும் வைத்திருந்தாள்.

*

இத்தாலியில் ரிலோல் நகரிலுள்ள பிரிக்ஸன் என்னும் கிராமத்தில் 1931-ம் ஆண்டில் 81-வயது முதியவர் ஒருவர் இயற்கை எய்தினார். டாக்டர் அவர் உடலைப் பரிசோதித்த பின் அவர் இறந்ததற்குக் காரணம் உணவின்மை, பசிக் கொடுமை என்றார். எந்நேரமும் கந்தலாடையே அணிந்திருப்பார். பன்னும் உருளைக் கிழங்கையும் தவிர வேறெதையும் உட்கொள்ள மாட்டார். அந்தக் கிராமத்தில் அவரைப்பற்றி; அவர் ஒரு ஜெர்மானியர் எனபதும் பாஸ் என்னும் நாமம் பூண்டவர் என்பதையும் தவிர வேறெதுவும் தெரியாது.

மரணத்தன்று பிணம் புதைப்பவன் அவருடைய 'சொத்தா'கிய கந்தல் ஆடைகளை கிளறும் பொழுது 20,000 ஸயர்கள் பவுனாக ஜொலிப்பதைக் கண்டான், மேலும் அதிசயத்தால் கிளறும் பொழுது எத்தனையோ பிரபல கம்பெனிகளில் இவரின் பங்கு சர்டிபிக்கட்களும், பாங்குகளில் சேமித்து வைத்திருந்த பணத்தைக் குறிப்பிடும் பாஸ் புஸ்தகங்களும் இருப்பதைக் கண்டான். அவர் சேமித்து வைத்தது எவ்வளவு தெரியுமா? பட்டினியால் இறந்தவரின் பெறுமானம்—கொஞ்சநஞ்சமல்ல 70,000 பவுன்கள்!

*

1948-ம் ஆண்டில் செஷயரிலுள்ள ரனகோன் நகரில் வசித்த ஏனேச்செரேட்டைப் பார்த்து மக்கள் எல்லோரும் நகைத்தார்கள். பைத்தியமாகக் கருதினார்கள். பெட்ரோல் ஊத்தி எரித்தாலும் கருகாத, அழுக்குப் படிந்த உடையே அணிந்திருப்பான். ஆனால் அவன் இறந்த பொழுது 32,000 பவுன்களுக்கு அதிபதி என்பதை அறிந்து மூக்கின்மேல் விரலை வைத்து வியந்தார்கள்.

*

1950-வருடம் மார்ச் திங்கள் பிளைமௌத் நகரில் ஓர் ஏழை இறந்த பொழுது அவனுடைய பாக்கெட்டில் 9,000 பவுன்கள் கத்தை நோட்டுக்களாக இருந்ததைக் கண்டார்கள்!

உலக மகாயுத்தத்திற்கு முன்பு லண்டன்மாநகரில் கவுன்ட் கவுன்சில் என்னும் இயக்கம் ஓர் கமிட்டியை நியமித்து கஞ்சர்கள், பணப் பைத்தியங்கள் பற்றிய ஓர் அறிக்கையை வெளியிடுமாறு வேண்டப்பட்டது.

*

புல்காம் நகரில் பெல் என்னும் பெண் ஒருத்தி பிச்சை எடுத்து ஜீவனம் நடத்திவந்தாள். ஒருநாள் யாரும் கவனிப்பாரற்று ரோட்டில் முனகிக்கொண்டிருப்பதைக் கண்டு இந்தக் கமிட்டி ஆதரவு நல்கியது. பின்பு, இவளின் பெயரில் பாங்கில் 1,000 பவுன்கள் சேகரித்து வைத்திருந்தாள் என்பது தெரியவந்தது!

கரோலின் செய்மர் வெல்வத் நகரில் தனது கணவன் இறந்த பின்பு யாருமற்ற அனாதையாய் மார்க்கட்டில் கழித்து வீசப்பட்ட அழுகிய மரக்கறிகளை உண்பதைக் கண்ட 'கவுன்ஸி' இயக்கத்தார் இவளுக்கு ஆதரவு கொடுக்க முன் வந்தனர். இவள் இயற்கை எய்திய பிறகே அவள் 80,000 பவுன்களுக்கு உடமையாளர் என்பது கமிட்டிக்குப் புலனாகியது.

["சுதந்திரன்"]

★

2-ம் பக்க தொடர்ச்சி

மோசஸ் நாற்காலியில் உட்கார்ந்துண்டு, நாயே! பேயே!ன்னு கூலியாட்களைத் திட்டிண்டு இருந்தான். நானும் அவனோடு சேர்ந்துண்டு திட்டுவது உண்டு — சிலவேளைகளிலே நாலு தட்டு கூடத் தட்டுவதுண்டு. அப்படிப்பட்ட எனக்கு அன்னக்கி வேறுவிதமா நடந்து கொள்ளோணும்னு எண்ணம் வந்தது.

"மோசஸ்! தொழிலாளிகளை இப்படி அமுல் செய்தா, வேலை எப்படி சரியா செய்வா? இதமாத்தான் பேசவேணும். மேலும், அவாளும் மனுஷ ஜென்மம்தானே. கூடமாட வேலை செய்தா உன் கௌரவமா கெட்டுவிடும்" என்றேன். மோசஸ் திகைத்துப் போனான், கூலிக்காரன்லே ஒருத்தன் ரொம்பச் சுறுசுறுப்பா இருந்தான் என்றேன் பார், அவனோட முகத்திலே ஒரே ஆனந்தம் தாண்டவமாடறது நன்னாத் தெரிந்தது, சரின்னு என்ன செய்தேன் தெரியுமோ, கோட்டைக் கழற்றி வைத்துவிட்டு, நானே, பார்சல்களைத் தூக்கறதும் இறக்கறதுமா, கூலிக்காராளுக்கு உதவியா இருந்தேன்......"

"ஏன்! ஏன்! அதென்ன பைத்தியக்காரத்தனம்"

"இதேபோல எண்ணிண்டுதான் மோசசும் என்னைக் கேட்டான், என்னோட செய்கைக்கு என்ன காரணம் என்கிறது, அவனுக்கு எப்படித் தெரியும்...இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அதாவது மறுநாள், என்னை, மேகநாதன் தன் ஆபீஸ் அறைக்கு அழைத்து, வெகுவாகப் பாராட்டி, 'மேலிடம்' கொடுத்தார்"

"கூலிக்காராளுக்கு உதவி செய்ததற்குப் பரிசா?"

"அப்படின்னு அவன் சொல்லலேனுமா? நாமே தெரிஞ்சுக்கொள்ள வேண்டியதுதான்..."

"ஆமாம்......கூலிக்காராளுக்கு உதவி செய்தீர் என்பதனாலே ...?"

"மண்டு! ஒரு உத்யோகஸ்தன், தன்னோட அந்தஸ்து, கௌரவம் இவற்றைக் கவனிக்காமப்படிக்கு, ஆபீஸ் காரியம் நடக்கோணும் என்கிறதுக்காக, கூலிக்காராளுக்கு உதவிசெய்தான் என்றா, அவனுக்கு ஆபீஸ் காரியத்திலே எவ்வளவு அக்கரை இருக்குன்னு அர்த்தம். அவனுடைய நிர்வாகத்திலே வேலை செய்கிறவாளுக்கு, எவ்வளவு அபிமானம் ஏற்படும். அதனாலே காரியாலயத்துக்கு அவர்கள் எவ்வளவு அன்போடு பாடுபடுவா, இதெல்லாம் புரியாதோ, எந்தத் தலைமை அதிகாரிக்கும். அதனாலே தான், கூலிக்காராளுக்கு இவ்வளவு உபகாரமாக இருந்தவனுக்கு உண்மையிலேயே சிலாக்கியமான குணம் இருக்கு என்பதை எண்ணி எனக்கு மேலிடம் கொடுத்தான் மேகநாதன்"

"சரி, நீர் கூலிக்காரனுக்கு உதவியாக இருந்தீர் — உம்முடைய அந்தஸ்து, கௌரவம் இவைகளைக் கூடக் கவனிக்காமல் பாடுபட்டீர், அவாளோடு பக்குவமாகவும் பிரியமாகவும் பேசினீர் என்பது மேகநாதனுக்கு எப்படித் தெரிந்தது?"

"அசடே! அவன் தான் என்னோட வேலையைப் பார்த்துண்டே இருந்தானே..."

"பார்த்துண்டு இருந்தானா? எங்கே இருந்து?"

"அந்தரத்திலே இருந்து! சொல்றேன் கேள். மண்டு! நான்தான் இந்த மேகநாதன் நிறையப் படித்தவன் என்று சொன்னேனே. ஒரு நாள் அவன் ரொம்ப சுவாரஸ்யமாக வாஷிங்டன் சரிதம் வாசித்திண்டிருந்தான், பார்த்தேன். வாஷிங்டன் தெரியுமடா...?"

"தெரியாமலென்ன. அமெரிக்கா பிரசிடெண்டு"

"ஆமாம்! அதைக் கவனிச்சுண்டேன். கூலிக்காரனுக்கு நான் உதவி செய்தது இருக்கே, அந்தச் சூட்சமம், மேகநாதன், வாஷிங்டன் புத்தகத்தைப்படித்ததாலே ஏற்பட்டதுதான். ஏண்டா பேந்தப் பேந்த விழிக்கறே? இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்கிறயோ! இருக்கு. வாஷிங்டனைப்பற்றி ஒரு கதை சொல்லுவாளே தெரியுமா...?

ஒருநாள், வாஷிங்டன் வெளியே படை வீரர்கள் வேலை செய்வதைக் கவனித்துக்கொண்டுவரச் சென்றான். ஒரு இடத்தில், பிரம்மாண்டமான மரத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நாலைந்து போர் வீரர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தலைவனாக இருந்தவன், உதவி செய்யவில்லை, ஆகட்டும் சீக்கிரம், தூக்குங்கள் சோம்பேறிக் கழுதைகளா! என்று மிரட்டிக்கொண்டிருந்திருக்கான், நம்மமோசஸ்போலவே. அப்போது இன்னொரு குதிரை வீரன் அங்கு வந்தான் — இதைப் பார்த்தான். பார்த்துவிட்டு, ஏன் ஐயா! இவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே, நீரும் ஒரு கை கொடுத்து உதவி செய்யக் கூடாதோ? என்று கேட்டான். அவன், ஏய்! யாரைப்பார்த்து அப்படிச் சொல்கிறே, நான் இவர்களுக்குத் தலைவன் என்று அவன் தற்பெருமையுடன் கூறினான். குதிரை வீரன், அப்படியா! அது தெரியாது எனக்கு என்று கூறி விட்டுக் குதிரையைவிட்டுக் கீழே இறங்கிவந்து, மரத்தைத் தூக்குவோருக்கு உதவி செய்துவிட்டு, போகும்போது சொன்னான். "ஐயா! இதுபோல எப்போதாவது உதவிக்கு ஆள் தேவை என்றால், உடனே எனக்குச் சொல்லி அனுப்பும், வருகிறேன் — நான்தான் வாஷிங்டன், சேனாதிபதி என்றான். எப்படி இருக்கும் அந்தத் தலைவனுக்கு! அசடு வழிந்திருக்கும், பயம் பிய்த்துத் தின்னிருக்கும். மேகநாதனிடம் வாஷிங்டன் புத்தகம் இருப்பதைப் பார்த்ததும் எனக்கு, இந்தக் கதை கவனத்துக்கு வந்தது. வந்திருக்கும் குதிரை வீரன் வாஷிங்டன் என்று தெரியாததால்தானே, அந்த அசடன் மாட்டிண்டான். அதுபோல நான் மாட்டிக்கொள்வனோ? அன்று மோசசிடம் திட்டு கேட்டுண்டு அதேபோது சுறுசுறுப்பாக இருந்தான் ஒரு கூலிக்காரன் என்று சொன்னேனே, அவன் வேறு யாருமில்லை, சாட்சாத் மேகநாதன் தான்..."

"அதெப்படி உனக்குத் தெரிந்தது......"

"எப்படி என்பது இருக்கட்டும், அதுதெரிந்தது. அதனாலேதான், எனக்கு வாஷிங்டன் கதை கவனத்துக்கு வந்தது. உடனே இதுதான் மேகநாதனை வளையக் கட்டச்

சரியான சமயம் என்று, கூலிக்காராளைச் சகோதராளாக பாவித்து நடத்தவேணும்என்று மோசசுக்குச் சொன்னேன், நானே அவாளோடு சேர்ந்து பாடுபட்டேன். இதைக் கண்டு மேகநாதன் பூரிச்சுப் போகாமலிருக்க முடியுமோ! அதனாலே தான், மறுநாள் என்னைப் பாராட்டி, 'மேலிடம்' கொடுத்தான். நான், எப்போதும் இதுபோல வேலையாட்களுடன் சரிசமமாகப் பழகி, உதவி செய்து, பக்குவமாக நடந்து கொள்பவன் என்று எண்ணிக்கொண்டான், அந்த ஏட்டுச் சுரைக்காய், அவன் கண்டானா, என்னோடது நடிப்பு என்பதை. ஏமாந்துவிட்டான். ஆபீசிலே உள்ள அத்தனை பேரும் சேர்ந்துண்டு, அவனிடம் சொல்லட்டும், இராமாச்சாரி சுத்தச் சோம்பேறி, ஒரு வேலையையும் ஒழுங்காகச் செய்ய மாட்டார், எல்லோர் மீதும் எறிஞ்சுவிழுவார் என்று சொல்லிப்பார்க்கட்டும்; மேகநாதன் 'பொறுமை பிடித்தவர்களே, அந்தத் தங்கமான மனஷனை அவ்விதம் சொல்லாதீர்கள், எனக்குப் பிரமாதமான கோபம் வரும், என்கண்ணாலே பார்த்தேன்; அந்த ஆசாமி கூலிக்காரர்களிடம் அன்பாகப் பழகி, கூடவே இருந்து வேலைசெய்ததை, அவரைப்போய், வாய்க்கு வந்தபடி பேசுகிறீர்களே. வயற்றெரிச்சல்தானே இதற்குக் காரணம், என்று கூறிக் கண்டிப்பார்".

"அது சரி, மேகநாதன் அங்கு இருந்தது உமக்கு எப்படித் தெரிந்தது என்பதைக் கூறவில்லையே..."

"கூலிக்காரர்களிலே ஒருவன், மற்றவர்களைவிட அதிக சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தான் என்று சொன்னேனல்லவா. அவன் சில சமயங்களிலே மோசசைப் பார்த்த பார்வை எனக்கு ஒரு சம்சயத்தைக் கிளப்பிற்று. மேகநாதன், மாறுவேடம் போட்டுக்கொண்டுவந்து இப்படி வேவு பார்க்கிறானோ என்றோர் சந்தேகம். வாஷிங்டன் புத்தகம் அவன் படித்தானே, அது கவனத்துக்கு வந்தது. வேலையின்போது, இரண்டோர் நிமிஷம் அவன் தனியாகச் சென்றிருந்தான். பிறகு, அவன் போய்விட்டுவந்த இடத்தை, நான் போய்ப் பார்த்தேன். பாதி இருக்கும், சிகரட், அவன் பிடித்துப் போட்டுவிட்டுப் போயிருந்தான். கூலிக்காரனாவது இப்படி பாதி சிகரட்டை வீணாக்குவதாவது! சரி, இவன் மாறுவேடம் போட்டுக் கொண்டிருக்கும் மேகநாதன்தான் என்று முடிவு செய்துகொண்டேன். சிகரட்டைக் கூர்ந்து பார்த்தேன், விலையுயர்ந்தது, 555. போதுமல்லவா ஆராய்ச்சி. ஆசாமி, ஏதேதோ புத்தகத்தைப் படித்துவிட்டு இப்படிச்செய்கிறான், இவனை இதே சமயத்திலேதான் சாய்க்கணும்னு 'பிளான்' செய்தேன். உடனேதான், தொழிலாளியானேன்—தோள் கொடுத்தேன் பார் சலைத் தூக்க. அசடன் அதை நம்பியேவிட்டான்"

"பலே! பலே! உன்னோடே சமத்து வேறு யாருக்கும் வராதப்பா"

"புத்தி தீட்சணியம் இருக்க வேணும்; சமயமறிந்து நடக்க வேணும்"

தம்பி! இராமாச்சாரி கதை ஏன் கூறுகிறேன், என்று எண்ணுகிறாய் அல்லவா! இராமாச்சாரிகள் இப்படி நரித் தந்திரம் செய்து, பிழைக்கிறார்கள் என்பதை விளக்குவதற்காக மட்டுமல்ல, மேனாடு சென்று படித்து, புதிய முறைகளிலே தேர்ச்சி பெற்று ஏடு பல படித்துப் பக்குவம் தேடிடும், மேகநாதர்கள் கண்களில், வெகு எளிதில், இராமாச்சாரி போன்றோர்களால் மண்ணைத் தூவிவிட முடிகிறது. அவர்கள் செய்யவேண்டியதெல்லாம், மேகநாதர்கள் மனம் எதிலே இலயிக்கும், என்பதைக் கண்டறியவேண்டியதுதான். அதை அன்பர் ஆச்சாரியார் செய்து நேரு பண்டிதரை எளிதாகத் தம் வலையில் விழச்செய்கிறார்—முன்பு பல முறை செய்திருக்கிறார் — இப்போதும் செய்கிறார், இதை எண்ணிப் பார்த்தபோது எனக்கு இராமாச்சாரி கதை கவனத்துக்கு வந்தது. நாட்டிலே எங்கோ, எப்போதோ நடைபெற்ற சம்பவத்தைத்தான் கதையாக்கினேன் தம்பி!

ஆச்சாரியார், **'தட்சிணப் பிரதேசம்'** கேட்டார்; யாருக்கும் உதிக்காத ஓர் அற்புதமான யோசனை இவருக்கு உதித்ததே—ஞானவான்களுக்கு எப்போதும் இப்படித்தான் என்று, ஆச்சாரியாரின் திருப்பல்லாண்டு பாடுவதிலே பயிற்சி பெற்ற கூட்டம் பாராட்டிற்று.

தமிழ்நாடு—மிகச் சிறிய அமைப்பு—இந்திய அரசியலிலே இந்தச் சிறிய அமைப்புக்குச் செல்வாக்கு ஏற்படாது—பெரிய அளவில் உள்ள உத்திரப் பிரதேசம், வைத்தது தான் சட்டமாக இருக்கும், என்று காரணம் காட்டினார், ஆச்சாரியார்.

எப்போது இதைச் சொன்னார் என்றால், ஆந்திரம் பிரிந்தபோது அல்ல; ஆந்திரம் கருநாடகம், கேரளம், எனும் அமைப்புகளை எப்படி எப்படி உருவாக்குவது, எந்த அடிப்படையில் என்பது பற்றி மூவர் கூடி ஒரு அறிக்கை வெளியிட்ட பிறகு!!

தமிழ்நாடு—மிகச்சிறிய அமைப்பு, ஆகவே அதற்குச் செல்வாக்கு இராது என்று கூறினதும் அப்படியானால், 'சிறிசு பெரிசு' பார்த்துத் தான் இந்திய அரசியல் நடந்து கொள்ளுமா, நீதி நேர்மைக்கு இடமளிக்காதா — தமிழ்நாடு சிறிய அளவாகவும், உத்திரப்பிரதேசம் பெரிய அளவிலும் இருந்தாலென்ன, எல்லாவற்றுக்கும் 'மேலே' உள்ள அதிகாரி, நேர்மையுடன் நடந்துகொள்ளக் கூடாதோ என்று யாரும் கேட்கவில்லை! கேட்டால் மட்டும் என்ன, ஆச்சாரியார் காதில் போட்டுக்கொள்வாரா! அவர்தான் கேளாக்காதர் என் என்பதை நாடு அறியுமே.

உலகிலே, பிரிட்டனும் பிரான்சும் அளவிலே சிறிய நாடுகள்—விரிந்து பரந்துகிடக்கும் அமெரிக்காவுடன். உலக அரங்கிலே அவை சமமாகத்தான் நடத்தப்படுகின்றன — அது மட்டுமல்ல, மிகப் பெரிய சீனாவுக்கு ஐ. நா.வில் இடமளிப்பதா, வேண்டாமா என்பதுபற்றி 'முடிவு' காண, இந்த நாடுகளிடம் முத்திரை மோதிரம் இருக்கிறது.

தனி அரசு நடாத்தும் நாடுகளிலேயே, அளவுபற்றி அல்ல அந்தஸ்து கிடைப்பது என்பதற்கு இதுபோன்ற ஆயிரத்தெட்டு எடுத்துக்காட்டுகள் உள்ளன—தமிழகத்து மன்றங்களிலே தளராது நமது தோழர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

தம்பி! மிகப் பெரிய சீனாவை, இராணுவத் திறனாலும் அமெரிக்க உதவியாலும், சிறிய ஜப்பான், ஆட்டிப் படைத்ததே!

ஜப்பான் விமானம் வட்டமிடுகிறது என்ற பீதியில் சென்னை நகரே காலி செய்யப்பட்டதல்லவா—உடைமையுடையோர்களால்!

பெரிய அளவு—சிறிய அளவு என்பதல்ல, ஒரு நாட்டின் செல்வாக்கை நிர்ணயிக்கும் காரணம்—

அதற்கு எண்ணற்ற எத்தனையோ காரணங்கள் உள்ளன.

இவ்வளவு பெரிய நாடுதானே பண்டிதரின பாரதம், நாள் தவருமல் நானிலத்திலே பல நாடுகளிலே இருந்தும், 'தலைவர்கள்' பவனி வருகிருர்கள், பாராட்டு தருகிருர்கள், பொது உடைமைத் தலைவரும் பூரிப்படைகிருர், மத அதிபர் எனத்தக்க முறையிலே உள்ள சவுதி அரேபிய மன்னரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிருர், எனினும், போர்ச்சுகல் போர்க்கோலமே போட்டுக் காட்டுகிறதே, கோவா என் கொல்லை என்று கொக்கரிக்கிறதே! அளவு தான் ஒரு நாட்டின் நிலையை நிர்ணயிப்பது என்ருல், போர்ச்சுகல், பாரதத்தை நிமிர்ந்து நின்று பார்க்கக் கூட முடியாதே! என்ன செய்ய முடிகிறது பண்டிதரால்?

**அகிம்சை பேச முடிகிறது! அவ்வளவுதானே!!**

நாட்டுக்கே அளவு முக்கியமல்ல என்ருல், ஒரே பேரரசில், ஒருஅங்கமாக உள்ளவைகளிலே, ஒன்று பெரிய அளவு மற்ருென்று சிறிய அளவு என்று இருந்தால் என்ன குடிமுழுகிவிடும்? நீதியுடன் பரிபாலனம் செய்யும் ஆட்சியில், அளவு பற்றிய கவலைகொள்வானேன்!

வங்கமும் பாஞ்சாலமும் துண்டாடப்பட்டுப் போயின — அளவு குறைந்துவிட்டன, எனவே அவைகளை, மூலையில் தள்ளவேண்டியது தான், தென்னகம் என்ற பெரிய அமைப்பு, ஆந்திரம், தமிழகம், கேரளம், கருநாடகம் என்றெல்லாம் தனி அமைப்புகளாகி விட்டன, சிறிய அளவு — எனவே, சிந்தத் தேவையில்லை, என்று ஒரு அரசு எண்ணுமானல், நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட மறுக்கிறது என்று பொருள், ஆச்சாரியாருக்கு இந்தச் சந்தேகம் வருவானேன்? ஏதோ 'வாடை' அடிக்கிறது.

ஊரிலே உள்ள சுருள்கத்திக்காரனுக்குத்தான் போலீசில் மரியாதை கிடைக்கிறது, சாதுவுக்கு மரியாதை கிடையாது என்று கூறிஞல், அந்த ஊர் போலீசின் தரமல்லவா, மிக மட்டம் என்று பொருள்? பெரிய அளவான அமைப்புக்குத்தான் செல்வாக்கு கிடைக்கும், சிறிய அளவுக்கு சீரழிவுதான் ஏற்படும் என்று சொல்லும்போது, 'மேலே' உள்ள அரசு, வலுத்தவனுக்கு இழுத்தவனுக்கு பெண்டாகும் போக்கிலே உள்ளது என்று ஆச்சாரியார் கருதுகிருர் என்றுதானே பொருள்? அவரும் 'ஜாடை மாடையாக' அதைக் கூறவும் செய்கிருர்— மாகாண ஆட்சி என்று ஒரு புகைக் காட்சிதான இருக்கிறது, உண்மையில், 'பாரதம்' இன்று ஒரு பண்டிதருடைய ஆட்சியில்தான் இருக்கிறது என்று கூறுகிருர். கூறி, அங்கலாய்க்கிருரா, ஆனந்திக்கிருரா என்று தெரியவில்லை.

ஒரு நேரு—என்று அவர் கூறுவதற்கு, ஒரு என்பதற்கு இரண்டு வகையிலும் பொருள்கொள்ளலாம்.

ஒரு—ஒப்பற்ற என்றும் கொள்ளலாம், ஒரே ஒரு தனிமனிதர் என்று வெறுப்புக்கும் இடமளிக்கிறது.

உபநிஷத் படித்த பெரியவர், ஒரு என்ற பதத்துக்கு அவர் இன்னும் பல பொருள்களை வைத்துக் கொண்டிருக்கக்கூடும் — ஒவ்வோர் இடத்துக்கு ஒரு பொருள் என்ற முறையிலே. மறைந்த மதிவாணர் சர். சண்முகம், பொருளற்ற கூறிஞர், ஆச்சாரியார் **குல்லூகபட்டர்** என்று!!

ஒரு நேருதான் பாரதத்தை ஆட்சிசெய்கிருர் என்ருல், அவருக்கு நீதியிலும் நேர்மையிலும் நம்பிக்கையும் பற்றும் இருப்பதாக ஆச்சாரியார் மனதார நம்பினல், ஏன், தமிழ்நாடு சிறிய அளவான அமைப்பாயிற்றே, செல்வாக்கு ஏற்படாதே, சீர்குலைந்து போகுமே என்று சிந்தாகூலராகவேண்டும்?

ஒரு நேருவிடம், அளவற்ற அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது —பல 'அரசுகள்' உள்ளன பாரதத்தில் என்று கூறப்பட்டாலும் உண்மையில் அரசாள்வது பண்டிதர்தான் என்ருல், ஆட்சியிலே அனைவருக்கும் பங்கும் பலனும், நீதியும் நேர்மையும் கிடைக்கவேண்டும் என்று ஆச்சாரியார் கருதுவாரானல், அவர் ராஜ்யங்களின் அளவுபற்றி அல்ல, கவலைப்பட வேண்டியது, தமிழ்நாடு எவ்வளவு அளவுள்ளது? ஆந்திரத்தின் அகலம் என்ன? என்பது அல்ல அவர் கவனிக்க வேண்டிய பிரச்சினை!

சாவிலிருந்து காப்பாற்றுவதா, சர்வேஸ்வரன் விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று விட்டுவிடுவதா, என்பதுதான் பொருளுள்ள பிரச்சினையாக இருக்கலாமே தவிர கழுத்தை நெறித்துச் சாகடிப்பதா, விழித்திருக்கும்போதா தூங்கும் போதா? விஷமிட்டா, கத்தியால் வெட்டியா? என்பதையா பிரச்சினையாக்கிக்கொள்வது.

அதுபோலவே, ஒரு நேருவிடம், எல்லா அதிகாரமும் குவிந்திருக்கிறதே, இந்த ஆட்சி முறை நல்லதா, அல்லது ஆட்சிப் பொறுப்பும், அதனை நிறைவேற்றுவதற்கான வசதிகளும் வாய்ப்புகளும், பாரதத்தில் பல்வேறு பகுதிகளிலேஉள்ள அரசுகளுக்கும் நீதி நேர்மையின் அடிப்படையிலே பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது தான் நல்லாட்சி முறையா, என்று தான் ஆச்சாரியார் பேசியிருக்க வேண்டும்.

**அது விஷயமாக அவருக்கு ஒரு தெளிவான, முடிவான கருத்து இருப்பதாகவே தெரியக் காணேம்.**

உப்புமிஞ்சினல் தண்ணீர், தண்ணீர் மிஞ்சினல் உப்பு என்பார்களே அதுபோல, சென்னையிலே செல்வாக்கு கிடைத்தால் டில்லியில் இவ்வளவு அதிகாரமா என்று எண்ணுகிருர், சென்னையிலே பிடி தளர்ந்தால், டில்லியிடமே இருக்கட்டும் எல்லா அதிகாரமும் என்று எண்ணுகிருர்.

தன்னைத்தான் மிக முக்கியமாக முன்னலே நிறுத்தப் பார்க்கிருரே தவிர, தாயகம், தனி அரசு, என்ற முறையிலே அவர் இந்தப் பிரச்சினையை அணுகவே இல்லை.

தன்னிலிருந்து, எப்போதாவது வளருகிருர் என்ருல், தன் இனத்துக்கு, எது நல்லது, சென்னையில் அதிகாரம் வளமாக இருப்பது நல்லதா, அல்லது டில்லியில் குவித்து வைப்பது நல்லதா, என்று யோசிக்கும் நிலைக்குச் செல்கிருர். அவ்வளவுதானே தவிர, அதிகாரங்கள் அனைத்தையும் டில்லியில் குவித்து வைத்துவிடுவதால், தென்னகம் தேய்கிறது, தன்மானம் மாய்கிறது, என்பது பற்றிய கவலை அவருக்கு எழுவதாகக் காணேம்.

ஆகவே, அவர் இப்போது, தமிழ்நாடு அளவில் சிறியதாகி விடுவதாலே, இந்தியப் பேரரசிலே செல்வாக்கு இராது, என்று பேசும் போது அவருடைய 'இதய சுத்தி' யிலே நமக்கெல்லாம் சந்தேகம் வரத்தானே செய்யும்.

**டில்லியில் ஏன் இவ்வளவு அதிகாரம்? டில்லி எதற்காக இந்த ஆதிக்கம் செலுத்தவேண்டும்?**

**சென்னை, கப்பம் கட்டிக் கட்டியங் கூறி, காவடி தூக்கி, சேவடி தாங்கி, தன்மானமிழந்துதவிக்கிறதே இதுதகுமா?**

REGD No. M. 4642 திராவிடநாடு போன் நெ. 15.

இவைபற்றி அல்ல இவர் கேட்பது? இவைபற்றி கொதித்தெழ இவருக்கு மனம் இடம் தரவில்லை. இதுதான் பிரச்சினை என்று அவர் கூற மறுக்கிறார். டில்லியில்தான் எல்லா அதிகாரமும் இருக்கும், அதன் ஆதிபத்தியத்தின்கீழ்தான் எல்லா இராஜ்யங்களும் இருக்கும், இராஜ்யங்கள் வரிகளைத் திரட்டும்; டில்லி வாரிக்கொண்டுதான் போகும், இதை மாற்றவேண்டியது பிரச்சினை அல்ல! இந்த ஆதிக்கம் டில்லியிலிருக்கும்போது, சென்னை, அதைத் தாங்கிக்கொள்ளும் 'வலிவு'டன் இருக்கவேண்டுமே—தமிழகம் என்று பிரிந்து, குறைந்த அளவிலே இருக்குமானால், எப்படி தாங்கிக்கொள்ளும், என்று கேட்கிறார் ஆச்சாரியார்!!

"பாவி பொல்லாதவன் படுக்கையைத் தட்டிப்போடு!" — என்று கூறிய பாட்டியின் கவலை, பாவையின் கற்பைக் காப்பாற்றுவது அல்ல—அது முடியாத காரியம் என்று பாட்டி விட்டுவிட்டாள்—கற்பை இழந்துவிடப்போகும் காரிகைக்கு, குத்தும்வெட்டுமாவது இல்லாமலிருக்கட்டுமே என்பதுதான் பாட்டியின் கவலை. ஆச்சாரியாருக்கும், டில்லிக்கு ஏன் இந்த ஆதிக்கம் என்று கேட்கும் துணிவும் எழக் காணோம், தாய்மை உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. அவருடைய கவலையெல்லாம், டில்லியின் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளும் 'வலிவு' வேண்டுமே, 'தமிழ் நாடு' என்றாகிவிட்டால், வலிவு இராதோ என்ற சம்சயம்தான். தட்சிணப் பிரதேசம் எனும் திட்டத்தில், வேறு எந்த தத்துவமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பாவி பொல்லாதவன் படுக்கையைத் தட்டிப்போடு என்று பேசும் பாட்டி போக்குதான் இந்த தட்சிணப் பிரதேசம் எனும் திட்டத்திலே தொக்கிக் கிடக்கிறது.

இனி, மேகநாதனை இராமாச்சாரி எப்படித்தந்திரமாகத் தன் வலையில் விழச் செய்தாரோ, அதுபோல, நேரு பண்டிதரை, ஆச்சாரியார், தம்முடைய தட்சிணப் பிரதேசத்துக்கு அழைத்துவர எடுத்துக்கொண்ட முயற்சி எப்படிப்பட்டது என்று அறிய ஆவல் ஏற்படும், தம்பி. அடுத்த கிழமை வரையில் ஆவலை அடக்கிக்கொண்டிரு, நல்ல தம்பியல்லவா.........

அன்பன்,

**அண்ணாத்துரை.**


கருகிய மொட்டானாள் **பாவை**

கசங்கிய மலரானாள் **பதுமை**

காமக் கிழத்தியானாள் **சந்திரபாலா**

**திராவிட நாடு பொங்கல் மலர்**

"மூன்று கட்டங்கள் நீதிபதியவர்களே! மூன்று கட்டங்கள்!! இப்போது, நானிருப்பது நாலாவது கட்டம்" — என்கிறாள் வனஜா, தேவன் எம். பி. பி. எஸ். —ன் மனைவி. நீதிபதி வந்தனம் வழங்கும் தீர்ப்பு?

★

புதுமைக்கு வரவேற்பு! சிந்தனைக்கு விருந்து!!

இவ்வாண்டு பொங்கல் மலரில்

**சி. என். ஏ.**

வழங்கும்

நாடகச் சித்திரம்

**பாவையின் பயணம்**

உங்கள் நெஞ்சை விட்டு மறையாது.

★

★ சொர்க்கத்தில் நரகம்

★ கனவான்

★ வெள்ளி முளைத்தது

★ ஆறடி நிலம்

இன்னும் பல! இன்பம் தர!!

**விலை ரூ. 1-8-0**

வண்ண ஓவியங்களுடன்

120 பக்கங்கள்

இந்த ஆண்டு மலர், ஒரு எழில் களஞ்சியம். எப்போதும் மணம் பரப்பும் அறிவுப் பெட்டகம்.


...காஞ்சிபுரம். 95. திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்